
பாராட்டு என்னும் மந்திரம்


உன்னை நீ... உணர்..!


முன்னேறும் தமிழ்நாடு!

Kazhagamurasu (Tamil Monthly E-Book) - September-2020

# கழக முரசு

ஆசிரியர்: 'சொல்லின் செல்வர்' ஆவடிக்குமார்

தமிழிலக்கியத் திங்கள் மின் இதழ்

செப்டம்பர் - 2020
விலை ரூ.5



# தமிழ் அழகு...!




**"சொல்லின் செல்வர்" ஆவடிக்குமார்**

நிறுவனத் தலைவர், அனைத்திந்திய தமிழ்ச்சங்கம்.
நிறுவனர், அம்மா தமிழ்ப்பீடம்.


தமிழ் அழகு...! தமிழ் பழகு..!
தமிழாய்ந்து தமிழாய் தமிழ் பழகு...!
(தமிழ் அழகு)

தொல் மொழி எங்கள் தமிழாகும்
சொல்வளம் காட்டும் வழியாகும்...
ஆழி சூழ் உலகத்தின் அறமாகும்
ஏழிசை கண்ட செம்மொழியாகும்...! செம்மொழியாகும்...!
(தமிழ் அழகு]

மலையோடு முன்தோன்றி
அலையோடு மண் மலர்ந்து....
வெண் முகிலாய்
உலகாளும் கரு மொழியாய்...
கண் விழியாய்...
எழில் வழியாய்...
நாளும் துளிர்க்கின்ற சிலை வடிவாம்...
(தமிழ் அழகு...)

வழுவாத நெறியோடு வளர்க்கின்ற இலக்கணமும்...
அழியாத புகழோடு தவழ்கின்ற இலக்கியமும்...
வழி வழியாய் கமழ்கின்ற கலை வளமும்...
உடல்மொழியாய் தோன்றி...
நிறைமதியாய் வளர்ந்து...
புகழுருவாய் செழித்திருக்கும் ஆளுமையும்...
மொழியாய் முளைத்திருக்கும் முத்தமிழாம்....
(தமிழ் அழகு...!)

கத்து கடல் கலைத்தாலும்... காலமகள் கண்ணின் கருமணியாய்
முச்சங்கம் வளர்த்த செந்தமிழின் தொடர் அங்கமென
அணி செய்யும் அனைத்திந்திய தமிழ்ச்சங்கம்...
கலையாத கன்னித் தமிழுக்கு
நிலையான மணிமகுடம்...!
யாழும், குழலும், முழவும் புழங்கும்
அழகு தமிழுக்கு ஆய்வரங்கம்...!
எங்கள் அனைத்திந்திய தமிழ்ச்சங்கம்...!
(தமிழ் அழகு...)

# KAZHAGAMURASU

(Tamil - Monthly E-Book)



**Editor:**
**AVADIKUMAR.**
No.71, Nineth Street, Kamaraj Nagar,
Avadi, Chennai -600071.
e-mail: kazhagamurasueditor@gmail.com
**Call: 99411 74777, WhatsApp: 99412 74777**



**Editorial Board Members:**

Professor, **Dr. V. SRILATHA,** M.A..M.Phil.,PhD.,
e-mail: srilathavenugopal@gmail.com

Professor, **Dr. C. MUTHUMALAI,** M.A.,M.Phil.,PhD.,
e-mail: cmuthumalai23@gmail.com

Professor, **Dr.S. MALLIGA.,** M.A.,M.Phil.,Ph.D.,
e-mail: mallikasubramanian1212@gmail.com

Professor, **Dr.A. VIJAYARANI** M.A.,M.Phil.,Ph.D.,
e-mail: vijayaranigvss@gmail.com

Professor, **Dr.M. GOVINTHARAJALU** M.A.,M.Phil.,Ph.D.,
e-mail: govindarajulum76@gmail.com

Kavimamani **"Citruli" R. RAM GANESH**
M.A.,M.Ed.,M.Phil., S. M. E.
e-mail: rganesh.phd@gmail.com

"Kavimamani" **Nellai G. SOMASUNDARI**
M.Sc.,B.Ed.,M.A.,M.Phil., S. M. E.
e-mail: gsomas30@gmail.com

Professor, **Dr. B.VAIDURIAMMAL**
M.A.(T), M.A.(Soc), M.Phil.,Ph.D.,, Dip in Telugu
e-mail: bvaiduma@gmail.com

Professor, **Dr. TAMIZHARASI KOTHAIMARBAN,**
M.A.,M.Phil.,Ph.D.,
e-mail: tamizhkothai@redeftamil.com

Professor, **Dr. M. SELVI,** M.A.,M.Phil., Ph.D.,
e-mail: selvichellappa1975@gmail.com

Professor, **Dr.V. SARALA ARUMUGAM,**
M.A.,M.Phil., Ph.D.,
e-mail: vsaralao@gmail.com

Professor, **Dr. N. DHANALAKSHMI,**
M.A.,M.Phil., Ph.D.,
e-mail: dhanasathiya2729@gmail.com

Professor, **Dr. S.G. ESTHER ARUL MARY,**
M.A.,M.Ed.,M.Phil., Ph.D.,
e-mail: sgesther03@yahoo.com

**Manager:**
Advocate **A. K. NIRAIMATHI,** M.A.,B.L.,
e-mail: nirainila03@gmail.com

**Designer:**
**V. IYAMPERUMAL,**
e-mail: yesviperumal@gmail.com



**Publisher:**
**AVADIKUMAR. M**

**Place of publication:**
No.71, Ninth Street, Kamaraj Nagar,
Avadi, Chennai - 600071.
Thiruvallur District, Tamil Nadu.
e-mail: kazhagamurasu@gmail.com
Kazhakamurasu@gma il.com

**Website:**
https://www.kazhagamurasu.in



# கழக முரசு

ஆசிரியர்: 'சொல்லின் செல்வர்' ஆவடிக்குமார்

முழக்கம் -1 செப்டம்பர் - 2020


## காலத்தின் குரல்...

அனைத்திந்திய தமிழ்ச்சங்கத்தின் நோக்கங்களை ஒலிக்கும் இலட்சிய பேரிகையாக, தமிழிலக்கியத் திங்களிதழ் "கழக முரசு" பிறப்பெடுத்திருக்கிறது. பத்திரிகையா..,? என்று எகத்தாளமாக வினா எழுப்பிவிட்டு... விளையாட்டாக கடந்துபோக நினைத்தவர்கள்கூட, பார்த்தவுடன் இதுதான் இலக்கியப் பத்திரிகை என்று உச்சி முகர்ந்து உவகை பெருக்கை வெளிப்படுத்துவதில் இருந்தே, நாம், நமது இலக்கு நோக்கிய இடைவெளி இல்லா பயணத்தை முறையாக முன்னெடுப்பு செய்திருக்கிறோம் என்பதை உணர முடியும்.

வாழும் மக்களின் தரத்தை மனதிற்கொண்டு படைக்கப்படும் இலக்கியம் தான் இதயத்தை ஈர்க்கும் பயனுடைய இலக்கியமாக வழக்கில் நிலைக்க முடியும். உள்ளத்தில் உணர்ந்தவற்றை உணர்த்த முற்படுவதைவிட, தன் ஆழ்ந்த புலமையையும், அறிவுத்திறனையும் காட்சிப்படுத்தி, மெத்தப் படித்த மேதாவிகள் ஒருவருக்கு ஒருவர் தங்கள் கல்வி ஆற்றலைப் பகிர்ந்துக் கொள்ள எழுதப்படும் இலக்கியங்கள் மதிக்கப்படும். ஆனால் மக்களிடம் சென்று சேராது. கல்லூரி ஆய்வரங்குகளில் கட்டிப் போட்டு காவல் காத்துக் கொண்டிருப்பார்கள்.

இந்த நவீன இலக்கிய கோட்பாடுகள் மற்ற மொழிகளுக்கு உயரியதாக இருக்கலாம். உலகின் மூத்த மொழியாம் தமிழ் மொழியின் இயல்புக்கு எதிரானதாகும். ஏனென்றால், மனிதனின் உணர்ச்சிகள் உண்டாக்கும் உடல் மொழியின் வெளிப்பாடுகள்தான் மொழியாக தகவமைக்கப்பட்டது. தமிழ்க்குடிகளின் வாழ்க்கையே வாய்மொழி இலக்கியமாக வளர்ந்து... செழித்து... நாட்டுப்புற வழக்காக நிலைத்து... நீடித்த... பின்னர் இலக்கியமாக வடிவம் பெற்றது. உருவான இலக்கியங்களின் புலமையை வைத்து இலக்கணம் கட்டமைக்கப்பட்டது. "இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்பலின்" என்ற தொல்காப்பியர் கூற்று மெய்ப்பிக்கும்.

தமிழ்க் குடிகளின் பண்பட்ட வாழ்வியல் நெறிகள்... பண்பாட்டுத் தடயங்கள்... கண்டெடுத்து, தாய்ப்பறவை தன் குஞ்சுகளுக்கு இரை தேடிக் கொண்டுவந்து ஊட்டுவதை போல, மன மெய்ப்பாடுகளை உணர்வேடு வெளிப்படுத்தும் சொற்களைத் தேர்ந்தெடுத்து எழுதுவது எழுத்தாளனின் கடமையாகும்.

பண்டிதர் வீட்டு பரண்களில் பதுக்கப்பட்டிருந்தப் பாட்டுத் தமிழை மீட்டு, பாமரன் வீட்டுத் திண்ணைக்கு கொண்டுவந்து சேர்த்த பாட்டன் பாரதியின் மீட்டுருவாக்கத்தில் தமிழ் கவிதைக் களம் செழுமை பெற்று தழைத்து நிலைத்தது. நாவசைப்பில் நானிலத்தை வெல்லும் நளினம் கற்ற பேரறிஞர் அண்ணா, பேசு தமிழுக்கு வீசும் தென்றலாய் தவழ்ந்து தன்மான தமிழுக்கு, தன்னெழில், "நடை" பாலம் அமைத்துத் தந்தார்.

தமிழைத் தமிழாக்கி, எளிய மக்களிடம் இயல்பாகக் கொண்டு சேர்த்த மகாகவி பாரதி, பேரறிஞர் அண்ணா போன்ற தமிழறிஞர்கள் அடித்தளமிட்ட அறவழியில் கழக முரசு மக்களின் உணர்வுகளை, உள்ளக்கிடக்கைகளை, இலக்கியமாக்கும் கடமையைச் செய்யும் காலத்தின் குரலாக ஒலிக்கும்.

இலக்கு நோக்கிய பயணத்தை உங்களது அன்பும், ஆதரவும், அரவணைப்பும் பலமாக்கட்டும்.

நல்லார்க்கினிய,

(ஆவடிக்குமார்)

# தூங்கும் கலைகள்... ஏங்கும் விழிகள்...!



**அலைகடல் நடுவே பல கலம் செலுத்தி, கடாரம் கொண்டான்! என்றும் கங்கை கொண்டான் என்றும் போற்றப்படும் தமிழ் மன்னர் ராஜேந்திர சோழர் அவர்கள் தன் தந்தை கட்டிய தஞ்சை பெரிய கோவிலுக்கு நிகரான ஒரு கோவிலாகக் கட்டிய கங்கை கொண்ட சோழபுரம் கோவிலுக்கு,,,,நாம், அனைவருமே சென்றிருப்போம்,,,!**

அத்திருக்கோவிலின் சிற்பங்கள் பற்றி கேட்டால்,,,, சண்டேச அனுக்கிரக மூர்த்தி சிற்பத்தை மட்டுமே சொல்லி நகர்வோம்,,,

அது மட்டும் தான் சிறப்பானதா ? இல்லை,,,

கங்கை கொண்ட சோழபுரம் கோவிலின் ஒவ்வொரு சிற்பமும்,,,விரிவான ஒரு கதை மட்டுமல்ல,,கலை அழகு சொல்லும்,,,

கங்கை கொண்ட சோழபுரம் கோவிலின் அர்த்த மண்டப கர்ண துவார படிக்கட்டுகளின் வழியாக கீழிறங்கி , கோவிலை வலம் வரும் பொழுது,

தென் புற சுவற்றின் தேவ கோட்டங்களில் வரிசையாக,,,,

நர்த்தன விநாயகர்,


அர்த்த நாரீஸ்வரர்,

தென்முகக்கடவுளான தட்சிணாமூர்த்தி,

சங்கர நாராயணர்,

நடராசர் சிற்பங்கள் காட்சி தருகின்றன !

குலசை. அ. வேலுப்பிள்ளை





மொ ந்  தை என்கிற ஒன்பது இசைக்கருவிகளை இசைக்கின்றனர் !

முப்புறமெரித்த சிவனுக்கும், கால் வலிக்குமே ? அவ்வப்போது இளைப்பாறிட வேண்டுமென நினைத்துத்தானோ ? என்னவோ ? இடது காலுக்கு தூண் கொடுத்த சோழ சிற்பியினை வாழ்த்திய படியே ... நாம் அந்த தூணின் பக்கத்தில் நோக்கினால்

அடேய்...சிற்பியே,,,?

இதோ நடராசரான ஆடல் வல்லான் ஆடுகின்றான்!

அவன்? ஆடுகின்றான் !

அவனான சிவனின் புதல்வர்கள் கணபதியும், முருகனும், தந்தையின் நடனத்தினைப் பார்த்தபடியே தங்கள் வாகனமான மூஞ்சுறு, மயிலின் மேலே அமர்ந்தபடி, ஆனந்தமாகப் .பறக்கின்றனர் !

அவர்களின் கீழ்

அவனுக்குப் பிடித்த நந்தி தேவரோ? கைவலிக்க மத்தளம் கொட்டுகிறார் !

ஏதுமறியாமல்...

அவனருகே!

அவன் காலடியில்..

சிவனே! அம்மா! என்றழைத்தவளோ !

காரைக்காலிருந்து கற்றைக் காலாகி வந்தவளோ!

பேயாகி. ...

பேச மறந்த படி. .அவனையே பார்த்தபடி.....

அவன் தாளருகே அமர்ந்தபடி.....கைத்தாளமிடுகின்றாள்!

கைத்தாளமிடும் காரைக்கால் பேய்க்கிழவியின் அருகில் அமர்ந்துள்ள , ஒன்பது சிவகணங்களும்,

சச்சரி,

கொக்கரை,

தக்கை,

தகுணி,

துந்துபி,

வீணை,

கரடிகை,

குடமுழா,

முக்காலன்! பிருங்கி நானாடும் ஆட்டத்தினையே மறைத்த படி

தூணுக்குப் பின்னால். .

என்னை ஆட வைத்து விட்டாயே ? என்று சொல்வது போல,,,கையில் தும்புரு என்னும் இசைக்கருவியுடன்,

பிருங்கி முனிவரும் நடனமிடுகிறார்.

முயலகன்..

பரமனின் வலது கால் மிதியினால்...

நெடுங்காலம் நீடித்திருந்த உடல் , மன வலியெல்லாம் பறந்திடுமோ என்கிற மயக்கக் களியாட்டத்தில் சுகித்த படி.... கையில் பிடித்த பாம்பினை புன்னகையுடன் ரசித்தபடி,,, என்னையும்,,கடைத்தேற்றும் சிவனே என ஈசனான சிவனின் தூக்கிய இடது கால் பாதத்தினைப் பார்க்கின்றான் !

ஆடும் சிவனுக்குப் பின்னால் காளியவள்!

ஆணுக்குப் பெண்ணொன்றும் இளைப்பில்லை காண் ! என்று மகாகவி பாரதி பாடியது போல உமக்கு நானொன்றும் இளைத்தவள் இல்லையென்றபடி ,, கோரத்தாண்டவம் ஆடுகிறாள் !

ஆணாதிக்கம் ஒழிகவென்று கூத்தாடுகிறாளோ?

ஆடல் வல்லானின், விரிசடை பறக்கிறது,,,,

ஆடும் ஆடல் வல்லானின் , பின், அவனுக்கும் நிழல் தரவா ? என்றபடி மரமொன்று கிளை விரித்து,,வித்யாதரர்கள் வான் வழிப் பூத் தூவிட,,,

வலது முன் கை அஞ்சாதே எனும் அபய ஹஸ்தம் காட்ட,

வலது பின் கையதுவோ டமருகமெனும் உடுக்கை ஒலிக்கிறது !

# அனைத்திந்திய தமிழ்ச் சங்கம்

அலுவலக முகவரி : எண். 71, ஒன்பதாவது தெரு,
காமராஜ் நகர், ஆவடி, சென்னை - 600 071

இணையதள முகவரி : https://anaithindiatamizhsangam.com

இ.மெயில் முகவரி : anaithindiatamizhsangam@gmail.com

## சங்கத்தின் நோக்கங்கள்:

1. தமிழ் மொழியின் வளர்ச்சிக்காகவும், முன்னேற்றத்திற்காகவும் இச்சங்கம் பாடுபடும்.
2. தமிழ்ப் பணியை ஊக்குவிக்கும் வகையில் விருதுகள், சான்றிதழ்கள், பட்டயங்கள், பணமுடிப்புகள், பரிசளிப்புகள், ஊக்கத் தொகை, உதவித் தொகை வழங்குதல் போன்ற நிகழ்வுகள் மூலம் தமிழறிஞர்கள் நலன் காக்க இச்சங்கம் பணியாற்றும்.
3. தமிழ்க் கவிஞர்கள், படைப்பாளரகள், எழுத்தாளர்கள் நல்வாழ்விற்காக இச்சங்கம் பெரிதும் கவனத்துடன் செயல்படும். அவர்களது ஆரோக்கியம், எதிர்கால முன்னேற்றம் அவற்றிற்கான சிறந்த முறைகளை வகுத்து அதன்படி செயல்பட வழிகாட்டும்.
4. தமிழ்ப் பற்றாளர்களுக்கு வழிகாட்டி நிகழ்ச்சிகள் நடத்துதல், பயிலரங்கம், கவியரங்கம், கருத்தரங்கம், நடத்துவதின் மூலம் தமிழ்ப் பற்றாளர்களை ஒருங்கிணைத்து செயல்படும்.
5. தமிழ் அறிஞர் பெருமக்களின் கருத்துக்களை எழுத்துக்களை சிறப்புக்களைப் போற்றும் வகையில் விழாக்கள் நடத்துவதின் மூலம் தமிழ்ப் பற்றாளர்களை ஒருங்கிணைத்து செயல்படும்.
6. தமிழ்மொழியின் தொன்மை, புலமை, வளமை போன்றவைகளை நிலை நிறுத்தவும், எதிர்கால தலைமுறைக்குத் தெளிவு படுத்தவும், விழிப்புணர்வை ஏற்படுத்தவும் முழு அர்ப்பணிப்போடு சங்கம் பணியாற்றும்.
7. இச்சங்கம் மகளிர், இளைஞர் மற்றும் மாணவர்கள் அனைவரும் சுய முயற்சியால் முன்னேறும் விதமாக அவர்களுக்கு தமிழ் மொழியின் இலக்கணம், கவிதை போன்றவற்றை முறையாக பயிற்றுவிக்கப் பாடுபடும்.
8. தமிழ் அறிஞர்கள், பற்றாளர்கள், கவிஞர்கள், எழுத்தாளர்கள், ஆதரவாளர்கள் உள்ளிட்டவர்களுக்கு அரசு அளிக்கும் உதவிகளைப் பெற்று தந்து அவர்களுக்குப் புது வாழ்க்கை அளிக்க இச்சங்கம் உதவும்.
9. இதுதவிர இன்னும் பிற்காலத்தில் தோன்றும் பல நல்ல நோக்கங்களுக்காகவும் சங்க பொதுக்குழுவின் தீர்மானங்கள் அடிப்படையில் இச்சங்கம் செயல்படும்.

இடது பின் கரத்தில் அக்னிப் பொறிகள்

இடது முன் கரமோ யானைத் தந்தம் போல நீண்டு தன் காலடியினைக் காட்டுகிறது ! என் பாதம் பணிந்தோர்க்கு பயமில்லை காண் என்று சொல்கிறதோ,,!

ஆடல்வல்லான் ஆடுகையில்... அவனின் அரையாடை மட்டுமல்ல, அணிந்திருக்கும், அணிகலன்களும்,பறக்கின்றன

ஆடியது போதும் ? போதும் !

வாரும்! வந்து சேரும்! .சீக்கிரம் வருகிறீரா ?

இல்லையேல் ஆடிக் கொண்டே இருக்கப் போகிறீரா?

எனக்கென்ன சாய்ந்து கொள்ள உமக்கும், பிள்ளைக்கும், பிடித்த நந்தி நின்று கொண்டிருக்கிறான்!

நான் காத்திருக்கிறேன் என்றபடி..... ஒய்யாரமாய் ரிக்ஷபத்தின் மீது சாய்ந்தபடி. நிற்கின்றாள் சிவனின் காமியான, சிவகாமியெனும் உமையாள்!

அத்தனையும்,,,கல்லில் தான்...! கல்லிலே தான் !

இனி!

அவன் என்ன செய்யட்டும் ?

இனியவன் ! அவனங்கே ஆயிரம் ஆண்டுகளுக்கும், மேலாக ஆடிக் கொண்டிருக்கின்றான் !

நாம் தான்...

அவனையும், கண்டு கொள்ளவில்லை,,, !

அவன் ஆட்டத்தின் கலை அழகினையும், கல் அழகினையும்,

கண்டு கொள்ளவில்லை... ?

இத்தனை அழகும்...

இராஜேந்திர சோழர் கட்டிய பெரிய கோவிலின் தேவ கோட்டத்திலுள்ள ஒற்றைச் சிற்பத் தொகுதியில் தான்...!

மயங்க வைக்கும், கலை அழகை காண உங்கள் விழிகள் ஏங்குகின்றனவா ?

கங்கை கொண்ட சோழபுரம் சென்று கண்டு வாருங்கள்! ❖



# இவள் ஒரு திருமதி

(ஒரு நிஜத்தின் நிழல்)

"சொல்லின் செல்வர்" **ஆவடிக்குமார்**

**1**

**தொட்டு விடத் தொட்டுவிடத் தொடரும்..... கைப்பட்டு விட பட்டுவிட மலரும்....**
**செல்லம்மாவின் செல்பேசி ஒலி எழுப்பிக் கொண்டிருந்தது...**

ம்... ஆரம்பிச்சுட்டாங்க... என்ற முனுமுனுப்போடு தன் தூக்கத்தை கெடுத்த செல் போனை வெறுப்போடு எடுத்து... அலோ... என்றாள் செல்லம்மா....

எல்லா வளமும் பூரண நலமும் பெற்று... நீண்ட ஆயுளோடும்...நிலைத்த மகிழ்ச்சியோடும்... ஓங்கு புகழில் உயர்ந்து வாழ்க...! இன்று பிறந்த நாள் காணும் செல்லம்மா இன்னும் ஆயிரம் பிறந்த நாள் கண்டு வாழ்வாங்கு வாழ நிறைமனதால் வாழ்த்துகிறேன்... வாழ்க பல்லாண்டு...

இடைவெளி இல்லாமல் ஒரே மூச்சில் வாழ்த்தி முடித்த குரல் கேட்டவுடன் தூக்கம் ... சலிப்பு போய் சிலிர்ப்பு, திகைப்பு, ஆவல் ஆட்கொண்டது.

தூக்க கலக்கத்தில் இருந்த செல்லம்மா ஒரு நொடியில் தன்னை நிலைபடுத்திக் கொண்டாள். நமக்கே தெரியாத நம் பிறந்த நாளை தெரிந்து வாழ்த்தும் ஜீவன் இருக்கிறதே என்ற ஆச்சரியத்தை



“

முடித்த குரல்
கேட்டவுடன்
தூக்கம் ...
சலிப்பு போய்
சிலிர்ப்பு,
திகைப்பு,
ஆவல்
ஆட்கொண்டது.

காட்டிக் கொள்ளாமல் மிக்க நன்றி என்று பதிலளித்தாள்.

எதிர்முனை வாழ்த்துக்குரல் அத்தோடு நிற்கவில்லை. என்னம்மா டிரீட், பார்ட்டி எதுவும் இல்லையா என்றது...

சாரி.... நான் பிறந்த நாள் கொண்டாடும் வழக்கம் இல்லை என்றாள்...

என்னங்க எவ்வளவு பெரிய எழுத்தாளர், கவிஞர், சொற்பொழிவாளர், தமிழிலக்கிய ஆய்வாளர், பெண் ஆளுமை நீங்க இப்படி சொல்றீங்க....



வேற எப்படி சொல்லனும்...? செல்லம்மாவுக்கே உரிய கண்டிப்பும், துண்டிப்பும் உள்ள வார்த்தை வந்தது...

நான் சும்மா ஒரு பேச்சுக்கு தாம்மா கேட்டேன்... ஓசியில் ஒரு விருந்து சாப்பாடு கிடைக்குமான்னு பார்த்தேன்... எனக்கு இங்க குடுப்பனை இல்ல... வேற இடம் பாக்கறேன்... விட்டுடுமா... என்று ஓட்டமெடுத்தான்.

போகிற போக்கில் செல்பேசி குரல் செல்லம்மாவின் அடிமனதில் உறங்கிக் கொண்டிருந்த ரணத்தை கிள்ளி விட்டதைப் போன்ற வலியில் செல்லம்மா துடித்தாள்.

பிறந்தநாள்... பள்ளியில் சேரவும், ஆதார் அடையாள அட்டை வாங்கவும் அவசியம் தெரிந்து வைத்திருக்க வேண்டிய ஒரு நாள் என்பதை தவிர அதற்கு வேறு முக்கியத்துவம் இருப்பதாக செல்லம்மா நினைக்கவில்லை...

> **“பிறந்தநாள்... பள்ளியில் சேரவும், ஆதார் அடையாள அட்டை வாங்கவும் அவசியம் தெரிந்து வைத்திருக்க வேண்டிய ஒரு நாள் என்பதை தவிர அதற்கு வேறு முக்கியத்துவம் இருப்பதாக செல்லம்மா நினைக்கவில்லை...**

செல்பேசி குரல் சொன்னதைப் போல நாடறிந்த எழுத்தாளர் தான். சிறந்த இலக்கிய ஆய்வுகள் செய்து பல பரிசுகள் பெற்றவர் தான்... அதைவிட நல்ல தமிழாசிரியை என்ற நம்பிக்கையை மாணவிகளிடம் பெற்று, அவர்களது ரோல் மாடலாக திகழ்பவர் தான்...

ஆனால் ... அதுவல்ல... செல்லம்மா...! வெளித்தோற்றத்தில் அவரது அழகு தவழும் ஒளிமுகத்தைப் பார்த்து பிரம்மிக்காத ஆண்கள் மிக சொற்பமாகவே இருப்பார்கள்... அவரது கம்பீரமான தோற்றம், மிடுக்கான பார்வை, தன் பொலிவை பாதிக்காத வகையில் அணிந்திருக்கும் நேர்த்தியான உடை என தனித்துவத்தோடு வலம் வரும் செல்லம்மாவை பார்ப்பவர்கள் கவலையில்லாத செல்வச் சீமாட்டி என்றே கருதுகிறார்கள்..

மீண்டும் செல்போன் ஒலி எழுப்பியது...! எடுத்தாள்...

அவளது தந்தை வேலப்பன்... என்னம்மா செய்யறே...? பிறந்த நாள் கேக் வாங்கி வரவா...?திருவேற்காடு வேதபுரீஸ்வரர் கோவிலுக்கு போய் அர்ச்சனை செய்துட்டு வரலாம்மா. இடைமறித்த செல்லம்மா வேணாம்பா...! இத்தனை நாள் இல்லாத புதுப்பழக்கம் இப்ப எதுக்குப்பா...? நான் பாத்துக்கிறேன்... நீங்க சாப்டீங்களா...? அம்மா சாப்டாங்களா...? நா நல்லா இருக்கேன் ... எனக்கு எந்த குறையும் இல்ல... நீங்க ஆபிஸ் போங்கப்பா... நானும் பள்ளிக்கு கிளம்பனும் நேரமாயிடுச்சி... என்று தன் வைராக்கியத்தை நாசுக்காக நடைமுறைப் படுத்தினாள்.

தான் பெற்ற மகளின் பிடிவாதத்தை மாற்ற முடியாது என்பதை உணர்ந்திருந்த வேலப்பன் சரிமா உன் விருப்பம் என்று முடித்துக் கொண்டார்...

நேரமாகிவிட்டது... பள்ளிக்கூடம் கிளம்ப வேண்டும்.. உணவு தயாரிக்க வேண்டும் ரயில் பிடித்து, பஸ் பிடித்து, சேர் ஆட்டோவில் தாவிக்கொண்டு இன்னும் ஒரு மணி நேரத்திற்குள் பள்ளிக்கூடத்தில் விரல் ரேகை பதிக்க வேண்டும்.. அன்றாட கடமைகளை உணர்ந்தவராக வேகமாக இயங்கினாள்.

குளித்து முடித்து அவசர அவசரமாக நெற்றியில் திலகம் இட்டுக்கொண்டவள் தன் மகளை எழுப்ப படுக்கை அறைக்குள் சென்றாள்... தூங்கும் குழந்தையை எழுப்பி தயார் படுத்தி பள்ளிக்கு அனுப்ப வேண்டு மென வந்தவளுக்கு அதிர்ச்சி..! படுக்கையில் மகள் இளமதி இல்லை... அருகில் அவரது தந்தை ஜெயன் தூங்கிக் கொண்டிருந்தார்.. தினமும் நான் வந்து எழுப்பும் வரை தூங்கிக் கொண்டிருக்கும் குழந்தை எங்கே ...இளமதி.... மதிம்மா... குரலெழுப்பியவாறு சுற்றும் முற்றும் தேடிக் கொண்டே வாசல் நோக்கி வந்தாள்...!

அங்கே....!?

(தொடர்வாள்)

முனைவர். சா.ஞா.எஸ்தர் அருள் மேரி



# முல்லைப்பாட்டில் அறிவியல்

**குறுநீர்க்கன்னல்:**


**முல்லைப்பாட்டு பத்துப் பாட்டு நூல்களில் ஒன்று. சங்க காலத்தில் குறுநீர்க் கன்னல் என்னும் கருவியைக் கொண்டு நாழிகையைக் கணக்கிட்டு கூறியதாக முல்லைப்பாட்டு நூல் குறிப்பிடுகிறது. நேரத்தைக் கணக்கிடுபவர்களை நாழிகை கணக்கர் என்று அழைத்தனர். காலத்தைக் கணிப்பதற்கு தமிழர் பழங்காலத்தில் கையாண்ட முறைகளுள் இதுவும் ஒன்று. இதனை நீர்க்கடிகை என்றும் அழைப்பர்.**

**பொழுதளந்து அறியும் பொய்யா மாக்கள்**
**தொழுது காண்கையர் தோன்ற வாழ்த்தி**
**எறிநீர் வையகம் வெலீஇய செல்வோய் நின்**
**குறுநீர்க்கன்னல் இணைத்தென்று இசைப்ப"**

*முல்லைப்பாட்டு, பா:55*

பொழுதை அளந்து அறிந்து கூறுவதற்கென சிலர் இருந்தனர். இவர்கள் தம் தொழிலில் பொய்ப்ப தில்லை. இப்போது இந்தப் பொழுதை உணர்த்துகிறது என்று கூற குறுநீர்க்கன்னல் என்னும் நாழிகையை உணர்த்தும் கருவியை இவர்கள் பயன்படுத்தியுள்ளனர்.

கன்னல் என்பதற்கு நாழிகை என்றும், நாழிகை வட்டில் என்றும் பொருள் கொள்வர். தண்ணீர் சிறுசிறு துளியாக வரும் அமைப்பை உடையதாதலின் அந்தக்கருவி குறுநீர்க்கன்னல் என்று கூறப்படுகிறது. இக்கருவி நாழிகை வட்டில் என்றும் அழைக்கப்பெறும். நாழிகை என்பது நேரத்தைக் கணக்கிடும் சொல். வட்டில் என்பதற்கு கிண்ணம் என்ற பொருள் உண்டு. நீர் பெய்து வைக்கும் பாத்திரத்தில் மழைநீர் நிரப்பி வைத்து அடியில் ஓட்டை போட்டு வைத்து இவ்வளவு நாழிகைக்கு இவ்வளவு நீர் கசியும் எனக்கணக்கிட்டு வைத்திருப்பர். காலத்தைக் கணிப்பதற்குத் தமிழர் பழங்காலத்தில் கையாண்ட முறைகளுள் இதுவும் ஒன்று. இக்கருவியைக் கொண்டு நாழிகையை அறிந்து கூறுவதற்கென்று அரசர்களுடைய அரண்மனையில் நாழிகைக் கணக்கர் என்னும் ஒருவகை ஊழியர் இருந்து வந்தனர் என்று இந்நூலுக்கு உரை எழுதும் உரையாசிரியர்கள் தெரிவிக்கின்றனர்.




**வரை படம்:** குறுநீர்க் கன்னல் என்று வழங்கப்படும் நாழிகை வட்டில் கருவி வெறுமனே காலத்தை மட்டும் கணிக்க பயன்படுத்தப்படவில்லை. நீர்க்கடிகாரம் என்று அழைக்கப்படும் இக்கருவி பாசனத் திட்டத்திற்கும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இக்கருவி முதன் முதலாக கி.மு.328 இல் பெர்சிய தேசத்தாரால் நீர்ப்பாசனத்திற்குப் பயன்படுத்தப்பட்டதாக கூறப்படுகிறது. முல்லைப்பாட்டு கி.பி.2ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டிருக்கலாம் என்பது மறைமலையடிகளாரின் கருத்து.

வாட்டர் கிளாக் என்று அழைக்கப்படும் நீர்க்கடி காரம் பழங்காலத்தில் நேரத்தைக் கணிப்பதற்காக உருவாக்கப்பட்டது. கி;பி; 16ஆம் நூற்றாண்டில் இக்கடிகாரம் பாபிலோன், எகிப்து, பெர்சியா ஆகிய நாடுகளில் பயன்படுத்தப்பட்டது. பிறகு இந்தியா, சீனா போன்ற நாடுகளும் பயன்படுத்தியுள்ளன என்பதற்கு சான்றாதாரங்கள் உள்ளன.

கி.பி. 16ஆம் நூற்றாண்டில் பயன்பாட்டில் வந்த ஒரு கருவியை தமிழர் கி.பி.2ஆம் நூற்றாண்டிலேயே பயன்படுத்தியுள்ளனர் என்பதை சங்க கால தமிழ் இலக்கியங்கள் பறை சாற்று கின்றன.

**துணை நூற்பட்டியல்**


1. சங்க இலக்கியம் பத்துப்பாட்டு மூலமும் தெளிவுரையும் அறிஞர் ச.வே.சுப்பிரமணியன்

2. தமிழ் இலக்கிய வரலாறு - முனைவர். கோ.வேங்கடராமன் ❖

"நீங்கள் காணும் - உங்களுக்கு பிடித்த நல்ல விஷயம் ஒன்றைப்பற்றி எழுதுங்கள்."



முனைவர் வே.ஸ்ரீலதா



# பாராட்டு என்னும் மந்திரம்..!!

பாராட்டு என்பது மிகச்சிறந்த மந்திரம். அதனை மற்றவருக்காக பயன்படுத்தும்போது நம் வாழ்க்கையும் அழகாக மாறும். பாராட்டை விரும்பாத மனம் இங்கு இல்லை. ஆனால் பாராட்டைப் பெற விரும்பும் மனம் மற்றவரைப் பாராட்டத்தான் மறந்துவிடுகிறது. இந்தப் பாராட்டை விரும்பும் மனம் ஒரு மனிதனுக்குள் எப்போது தோன்றுகிறது என்று சிந்திக்கும்போது, அது குழந்தை கருவான கணமே என்பது தெளிவாகிறது. கருவுற்ற தாய் குழந்தை அசைவினை உணர்ந்து மகிழ்ச்சி அடைந்து பேசும் நிலையில் அக்குழந்தையும் உணர்ந்து மீண்டும் அசையத் தொடங்கும். இவ்வசைவினில் தாயின் பாராட்டைப்பெறவே அக்குழந்தை விரும்புகிறது என்பதை உணரலாம்.

முதன்முதலில் குழந்தை அடிவைத்து நடக்கும் காட்சியினைப் பார்த்திருப்போம். ஒருஅடி எடுத்து வைத்தக் குழந்தை தனக்கு பின்னால் இருப்பவரைத் திரும்பி பார்க்கும். பின்னால் இருப்பவர் அக்குழந்தை அடியெடுத்து வைத்ததை எண்ணி மகிழ்ந்து கைத்தட்டி பாராட்டும்போது அக்குழந்தையும் மகிழ்ச்சியில் மீண்டும் அடுத்த அடியை எடுத்துவைக்க முயலும். இப்படி பாராட்டு என்பது மனித வாழ்க்கையில் மையப்பொருளாகவே மாறிப் போயிருக்கிறது. சமீபத்தில் ஒரு கதையை வாசிக்க நேர்ந்தது.

ஒரு ஆசிரியர் தன் வகுப்பு மாணவர்களிடம் வெற்றுத் தாள்களைக் கொடுத்து, ஒவ்வொருவரையும், வகுப்பில் உள்ள மற்ற மாணவர்கள் அனைவரின் பெயரையும், ஒரு பெயருக்கும் அடுத்த பெயருக்கும் இடையே சிறிது இடைவெளிவிட்டு எழுதச் சொன்னார். மாணவர்கள் எழுதி முடித்தவுடன், "ஒவ்வொரு பெயருக்கும் எதிரே, அவர்களிடம் நீங்கள் காணும் - உங்களுக்கு பிடித்த நல்ல விஷயம் ஒன்றைப்பற்றி எழுதுங்கள்." என்றார். மாணவர்களும்



யோசித்து, தங்களுக்கு தோன்றியதை எல்லாம் எழுதிக் கொடுத்தனர். வாரஇறுதியில் ஆசிரியர் ஒவ்வொரு மாணவனின் பெயரிலும் ஒரு தாள் தயார் செய்து, அதில் மற்ற மாணவர்கள் அவனைப்பற்றி எழுதியிருந்த உயர்வான வார்த்தைகளை வரிசையாகத் தொகுத்து எழுதி கீழே தன் கையெழுத்தையும் போட்டு, மாணவர்கள் ஒவ்வொருவராக அழைத்து அவர்களின் பெயரிட்ட தாளைக் கொடுத்தார். மாணவர்கள் அவரவர் இடத்திற்கு சென்று அமர்ந்து படிக்கிறார்கள். 10 நிமிடங்கள் - வகுப்பறையே மகிழ்ச்சிக்கடலில் மிதந்தது. “நான் இவ்வளவு சிறப்பானவனா..? என்னைப் பற்றி மற்றவர்கள் இவ்வளவு நல்ல அபிப்பிராயம் வைத்திருக்கிறார்களா ?“ - அத்தனை மாணவர்களும் மகிழ்ச்சியில் திளைக்கிறார்கள், அந்தப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள குணாதிசயங்களை மேலும் மேலும் வளர்த்துக் கொள்ள முயற்சி செய்கிறார்கள். தன்னைப்பற்றி உயர்வாகச் சொன்னதற்காக, ஒவ்வொரு மாணவனுக்கும், சக மாணவர்கள் மேல் அன்பு அதிகரிக்கிறது. வருடங்கள் நகர்கின்றன. அந்த வகுப்பில் படித்த சரவணன் என்னும் மாணவன் ஒருவன் வளர்ந்த பிறகு இராணுவத்தில் சேர்கிறான். பிறகு போர் ஒன்றில் வீர சாகசம் புரிந்து, மரணம் அடைகிறான். அவன் உடல் இராணுவ மரியாதையுடன் சொந்த ஊர் கொண்டு வரப்படுகிறது. இறுதிச் சடங்கில், கலந்து கொள்ள அந்த ஆசிரியரும் செல்கிறார். இராணுவ உடையில் நாட்டின் தேசியக்கொடி போர்த்தப்பட்டு, சவப்பெட்டியிலும் கம்பீரத்துடன் காணப்பட்ட அந்த மாணவனைக் கண்டு பெருமிதத்துடன் கண் கலங்குகிறார். ஒவ்வொருவராக வரிசையில் வந்து இறுதி மரியாதை செலுத்துகின்றனர். ஆசிரியர் கடைசியாகச் செல்கிறார். பின்னர், பக்கத்திலேயே நிற்கிறார். உடலைத் தாங்கி வந்த, ராணுவ சக வீரர்கள் அருகிலேயே நின்றிருந்த ஒரு வீரர் கேட்கிறார் “நீங்கள் சரவணனின் 10ஆம் வகுப்பு டீச்சரா ?“ என்று. ஆசிரியர் ஆம் என்று தலையசைக்கிறார். பின்னர் அந்த ராணுவ வீரன் சொல்கிறான் “டீச்சர் எனக்கு உங்களைத் தெரியும். சரவணன் உங்களைப்பற்றி எப்போதும் சொல்லிக்கொண்டே இருப்பான்“ சடங்குகள் முடிந்த பின்னர், சரவணனின் பழைய வகுப்புத் தோழர்கள் அங்கு ஆசிரியருடன் ஒன்றாக நின்றிருந்தனர். அங்கு சரவணனின் தாயும் தந்தையும் வருகின்றனர். அந்த சோகத்திலும் தந்தை ஆசிரியரிடம் கூறுகிறார் “டீச்சர் நான் உங்களுக்கு ஒன்றைக் காட்ட வேண்டும். இது சரவணன் போரில் கொல்லப்பட்டபோது, அவனது பாக்கெட்டிலிருந்து இறுதியாக கண்டெடுக்கப்பட்டது“. அவர் காட்டியது, பெரிய பர்ஸ் ஒன்றில் பத்திரமாக பல முறை மடிக்கப்பட்டு, மடிப்புகள் எல்லாம் டேப் போட்டு ஒட்டப்பட்டு பத்திரமாக பாதுகாக்கப்பட்ட ஒரு தாள். ஆம், பல வருடங்களுக்கு முன்னர் அந்த ஆசிரியர் சரவணனைப் பற்றிய நல்ல குணங்களை வரிசைப்படுத்தி தொகுத்து எழுதிக் கொடுத்திருந்த அதே காகிதம் தான் ! கண்ணீர்ப் பெருக்குடன் சரவணனின் தாய் கூறுகிறார் “ரொம்ப நன்றி டீச்சர் - உங்கள் கடிதத்தை அவன் உயிரையும்விட மேலாக விரும்பினான். இத்தனை வருடங்களும் அதை அவ்வளவு பத்திரமாக பாதுகாத்து வந்தான். அவனுக்கு வாழ்க்கையில் மிகுந்த தன்னம்பிக்கையும், பிடிப்பும் ஏற்பட இந்த காகிதம் தான் உதவியது.“ ஆசிரியரும் மற்ற மாணவர்களும் சரவணனை நினைத்து கதறி அழுகின்றனர்.

இவ்வாறாக அக்கதை அமைந்திருந்தது. அந்தக் கடிதம் அவனை இராணுவ வீரனாக்கியது என்பதில்லை. அந்தப் பாராட்டு கடிதம் அவனை அவனுக்கு அடையாளம் காட்ட உதவியது. அவனைபாராட்டி சிறப்புகளை எடுத்து சொன்ன கடிதமது. அதனால்தான் அவனின் கடைசி நிமிடங்கள்வரை அவன் அதனைப் பாதுகாத்தான்.

சின்ன சின்னப் பாராட்டுகளில் பெரிய சாதனைகள் ஒளிந்திருக்கின்றன.

குறைகள் என்பது அனைத்து மனிதர்களிடமும் இருக்கும். அதே சமயம் நிறைகளையும் மனிதர்கள் நிச்சயம் பெற்றிருப்பார்கள். எப்போதும் ஒரு மனிதரை பற்றி எண்ணும் போதும் பேசும்போதும் அவரின் நிறைகளை, நல்ல குணங்களைப்பற்றி மட்டுமே பேசுவோம். குறைகளை மட்டுமே பேசுவதற்கு மௌனமாய் இருப்பது சிறந்தது. மனம் திறந்து பாராட்டுவோம். பாராட்டு என்பது ஒரு மந்திரம். அதைப் பயன்படுத்தும்போது நம் வாழ்க்கை மட்டும் அல்ல சுற்றி இருப்பவர்களின் வாழ்க்கையும் அழகாவதைக் காணலாம். ❖

# கொரோனா நிதியளிப்பு...



**கொ**ரோனா தொற்று தாக்குதலை எதிர்த்துப் போராடும் தமிழ்நாடு அரசின் நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கும் வகையில், "முதலமைச்சர் பொது நிவாரண நிதி"க்கு, அனைத்திந்திய தமிழ் சங்கத்தின் சார்பில் ரூபாய் 25 ஆயிரம் நிதி வழங்கும் காசோலையை தமிழ் வளர்ச்சி, தமிழர் பண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் மா.ஃபா. கா. பாண்டியராஜன் அவர்களிடம் அனைத்திந்திய தமிழ்ச்சங்கத் தலைவர் மற்றும் அம்மா தமிழ்ப்பீடம் நிறுவனர் "சொல்லின் செல்வர்" ஆவடிக்குமார் வழங்கிய நிகழ்வின் படம்

**கொ**ரோனா நோய் தொற்று ஒழிப்பு நிதி திரட்டி, முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கு ரூபாய் 2 லட்சம் வழங்கிய "உரத்த சிந்தனை" எழுத்தாளர் வாசகர் வட்ட நிதிக்கு அனைத்திந்திய தமிழ்ச்சங்கத்தின் நன்கொடையாக ரூபாய் ஐந்தாயிரம் வழங்கும் காசோலையை உரத்த சிந்தனை அமைப்பின் பொதுச் செயலாளர் உதயம் ராம் அவர்களிடம், அனைத்திந்திய தமிழ்ச்சங்கத் தலைவர் மற்றும் அம்மா தமிழ்ப்பீடம் நிறுவனர் "சொல்லின் செல்வர்" ஆவடிக்குமார் வழங்கிய நிகழ்வில் உரத்த சிந்தனை துணைத் தலைவர் அமுதா பால கிருஷ்ணன் உடன் இருக்கிறார்.



# ஏகலைவனாக முயல்வோம்

**I can ....We can என்ற சொற்களுக்கும், அதற்கான கருத்துரு குறியீட்டு உருவப்படம் இப்படி உயர்த்திய கட்டை விரலானதற்கும் வேட்டுவர் குலத் தலைவன் ஏகலைவன்தான் காரணமோ?! என எண்ணத் தோன்றுகிறது.**

பின்வரும் உரைக்கோவையை வாசித்துப் பாருங்கள் தங்களுக்கும் இது தெள்ளிதின் விளங்கும்.

மகாபாரதக் கதைகளும், அதன் உப காட்சி உபதேச நிகழ்வுகளும் நம் அன்றாட வாழ்வில் ஏதேனும் ஒரு இடத்தில் பொருந்தி வருவதை நாம் உணராமல் இருக்க முடியாது.

ஏகலைவன் உபகதையும் அப்படியே!

பிறப்பில் வேட்டுவனான ஏகலைவன் ஒடுக்கப் பட்ட மக்களின் குழுத்தலைவன்.

அவன் வில்வித்தையைக் கற்க விரும்பி பயிற்றாசான் துரோணாச்சாரியாரிடம் வேண்டுகோள் வைக்கின்றான்.

சில காரணங்களால் வில்வித்தையை அவனுக்கு பயிற்றுவிக்க இயலாதென துரோணர் மறுதலிக்கிறார்.

இந்நிலையில் வில்வித்தையைக் கற்க அவனது மனம் ஊக்கம் காட்டுகிறது. மீண்டும் துரோணரை அணுகுகின்றான் ஏகலைவன். அவரோ என்னால் கற்றுத்தர இயலாது....முடிந்தால் நீயே கற்றுக்கொள்! என அவனைத் திருப்பி அனுப்பிவிடுகிறார்.

மனம் தளரவில்லை வேடுவர் குலத்தலைவன்.

தானும் வில்வித்தையில் தேர்ந்தவனாக மாறவேண்டும் என மனதினுள் சபதமெடுத்து உறுதி கொள்கிறான்.


**"தெய்வத்தால் ஆகாதெனினும் தன்முயற்சி மெய் வருத்தக் கூலிதரும்"** என்பதற்கேற்ப

ஓர் உருவ பொம்மையை வடிவமைத்து அதையே தன் குருவாக உருவகப்படுத்தி தன் சுயமுனைப்பால் வில்வித்தையை நாள்தோறும் பழகுகிறான்.

ஒவ்வொரு நாளும் வித்தைக்கான பயிற்சியைத் தொடங்கும் முன்பாக துரோ(க)ண குருவை தன் மனதில் உருவகப்படுத்தி தியான நிலையில் அவரை வணங்குவதை வழக்கமாகவும் கொண்டிருந்தான்.

அப்படி ஒருநாள் தியானநிலை வணக்கத்தில் தன்னை மறந்து ஆழ்ந்தபோது அந்துப்பக்கம் வந்த நாய் ஒன்று வேட்டுவர் குலத் தலைவன் ஏகலைவனைப் பார்த்து குரைத்து அவனது தியான நிலையைக் கெடுக்க முனைகிறது.


இதனால் சினமுற்ற அவன் கண்களை



சிற்றுளி இராம். கணேஷ்

“பயிற்சியைத் தொடங்கும் முன் துரோகண குருவை மனதில் உருவகப்படுத்தி வணங்குவதை வழக்கமாகவும் கொண்டிருந்தான்.





குருதட்சணையாகக் கேட்கிறார். ஏகலைவனின் திறனை முழுமையும் முடக்கவும் எண்ணுகிறார்.

அதற்கும் இசைவு தந்து வில்லைப் பயன்படுத்த நாண் பற்றி இழுக்கும் தன் கட்டைவிரலையே வெட்டி காணிக்கையாக்கி நம் கண்களில் பிரமிப்பை ஏற்படுத்துகிறான் அந்த வேட்டுவர் குலத்தலைவன் ஏகலைவன்.

இது மகாபாரதத்தின் சிறு கூறுதான்! இதை தற்கால சூழலில் நாம் பொருத்திப் பார்க்கத் தலைப்பட வேண்டும்.

மூடிய நிலையிலேயே...நாயின் குரைப்பொலி வந்த திசையை நோக்கி தொடர்ந்து அம்புகளைச் செலுத்தி நாயின் வாயைத் தன் அம்புகளாலேயே தைத்து விடுகிறான்.

இதனால் வலி பொறுக்காத நாய் தன் தைக்கப்பட்ட வாயுடன் குரைக்கவும் இயலாமல் ...

துரோணர் இருந்த திசைநோக்கி ஓடிச் சென்று விடுகிறது.

இதனைக் கண்ட வில்வித்தைப் பயின்ற அருச்சுனன் ஐயமுற்று துரோணரிடம் அதைக் காட்டுகிறான்.

இவ்வாறு அம்பு எய்பவன் அசாத்திய வில்வித்தைத் தெரிந்தவனாகத்தான் இருக்கமுடியும் என உணர்ந்து துரோணரிடம் தன் கருத்தையும் முன் வைக்கிறான்.

துரோணரும் அதை ஆமோதித்து அர்ச்சுனனுடன் காட்டில் தேடிப்பார்க்கின்றார். அங்கே இருவரும் ஏகலைவனைக் காண்கின்றனர்.

இதுபற்றி வினவிய துரோணர். யார்? உனக்கு இக் கலையைக் கற்றுத் தந்தது சொல்! எனக் கேட்கிறார்.

தன் மனதால் உருவகம் செய்து தியானத்தால் கண்டுணர்ந்த குரு துரோணரை நேரில் கண்டதும் விழுந்து வணங்குகிறான். உள்ளுக்குள் உவக்கிறான்.

தங்களை மனதால் குருவாக உருவகம் செய்து வணங்கியே வில்வித்தையைப் பயின்றேன் என்று பக்தியுடன் உரைக்கிறான் அந்த வேடுவர் குலத் தலைவன் ஏகலைவன்!

இதைக்கேட்ட துரோணர் அவன் கட்டைவிரலை

ஏகலைவன் போல இன்று நாமும் சபிக்கப்பட்டுள்ளோம் நாம் கல்விக் கூடங்களுக்குச் செல்லவோ.... ஒன்றாக சேர்ந்து கல்விப்பயிலவோ முடியாதபடி...கொரோனா எனும் கொல்லித்தொற்று நம்மை முடக்கிப் போட்டுள்ளது.

ஆனாலும்...ஏகலைவனது நம்பிக்கையைப் போல் நாமும் நம் நம்பிக்கையை இழக்காமல் நம் ஆற்றலை ஒருமுகப்படுத்தி சுயமாகக் கற்றுக்கொள்ள வேண்டும்.

இனி கற்பித்தல் கற்றல் முறை நுட்பம் மாறுபட்ட தாகவே இருக்கும்.

வரையப்பட்டுள்ள கலைத்திட்டங்கள் இனி பயன் படாது. மாற்று நுட்ப முறைக்கு நாம் மாறித்தான் ஆக வேண்டும்.

**இவான் இலிச்** என்ற மேற்கத்திய அறிஞரின் சிந்தனைப்படி (De schooling society) பள்ளிகள் இல்லா சமுதாயம் என்பது நிகழத் தொடங்கிவிட்டது.

கூகுள் செயலிகள்....இணையவழி வகுப்புகள்...நேரலை பங்கேற்புகள்.....புலன, முகநூல் குழுமங்கள், இணைய கல்லூரி பல்கலைக்கழகங்கள் அவற்றின் செயல்பாடுகள் இனி மாற்றத்தை முன்னெடுக்கும். இவற்றை கூர்ந்து சுயமாகக் கற்று நம்மை நாமே மேம்படுத்திக்கொள்ள வேண்டிய தருணத்தில் நாம் இன்று உள்ளோம்.

உலக நாடுகளும் அதற்கேற்ப புதிய கற்றல் கற்பித்தல் நுட்பத்தை நோக்கி நம்மை வழிநடத்திடத் தொடங்கி விட்டன.

நவீன கொரோனா நச்சுத் தொற்று ஆதிக்கத்தால் இன்று யாவருமே..... வித்தை கற்கும் ஏகலைவன்களாய்! மாறியே ஆக வேண்டும். ❖

ஆசிரியர் செ.முருகசரஸ்வதி

# உழவும் உலகமும்

**உலக மக்கள் அனைவருக்கும் உயிர் கொடுக்கும் தொழில் வேளாண்மை எனும் உழவுத் தொழில். பல்லாண்டுகள் பழமையானது.**



உழவுத் தொழில் கி.மு 7 ம் நூற்றாண்டில் இருந்து தான் இந்திய துணைக்கண்டத்தில் பார்லி,கோதுமை போன்ற பயிர்கள் பயிரிட்டு பாதுகாக்கத் தொடங்கினர்.

பின் அந்தந்த இடத்திற்கு தகுந்தாற் போல் பல்வேறு பயிர்கள் பயிரிட்டு உழவுத்தொழிலைப் பெருக்கினர்.இதை அகழ்வாராய்ச்சி மட்டும் அல்ல, பல்வேறு இலக்கியங்களிலும் காணமுடிகிறது. காலந்தோறும் உழவின் மேன்மை பற்றி பல்வேறு இலக்கியங்கள் கூறிவருகின்றது.

எந்தவொரு தொழிலின் சிறப்பையும் கூறாத வள்ளுவர், உழவு தொழிலுக்கு மட்டும் தனி அதிகாரம் வகுத்து உள்ளார். உழவின் சிறப்பை;

**'சுழன்றும் ஏர்பின்னது உலகம் அதனால்**
**உழன்றும் உழவே தலை"**(1031)

உலகம் பல தொழில்களால் சுழன்றாலும் உழவுத் தொழிலையே தலை சிறந்தது என்கிறார்,வள்ளுவர்.

**"உழவுப்பணியே சிறந்தது பிற பணி எல்லாம் பழுதுடையது"** (நல்வழி 13) என்று உழவை முன்னிறுத்துகிறது நல்வழி.

வேட்டையாடி வாழ்வு கண்ட மனிதனுக்கு நாகரீக வாழ்வு தந்தது உழவுத்தொழில். மனிதனை விலங்கிலிருந்து மேம்பட்டவனாக மாற்றியது. விலங்குகளைப் பழக்கி, கருவிகளை கண்டறிந்து, நிலத்தை பக்குவப்படுத்தி, புதிய பரிமாணம் கண்டான். இவ்வாறு சிந்தித்துப் புதிய வாழ்வைப் பெற்றது உழவுத்தொழிலால் தான்!!!!

**"உழவே அறிவியலுக்கு எல்லாம் உயர்வான அறிவியல"** என்கிறார் டாக்டர் ஜான்சன்.

பழந்தமிழ் நூலான, புறநானூறு **"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத் தோரே"** என்கிறது.

இதை விட உயர்வாக கம்பரும், **''செங்கோல் நடத்துவது உழவரின் ஏரடிக்கும் சிறுகோல்''** என்று உழவானது செங்கோலை விட உயர்ந்தது என்கிறார். அரசரை விட உழவர்களை உயர்த்தி கூறியுள்ளார்.

**"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றவரெல் லாம்**
**தொழுதுண்டு பின் செல்பவர்"**

உலகில் வாழ்கிறவர்கள் உழவர்கள் மட்டுமே, மற்றவர்கள் அவர்களை பின்பற்றி செல்பவர்கள்,என்ற வள்ளுவரின் வாக்கின்படி... உயர்வானவர்கள் உழவர்களே...

உழவர்கள் சேற்றில் கால்வைத்தால் தான், மற்றவர்கள் சோற்றில் கை வைக்க முடியும்,,, என்பதற்கிணங்க உலகம் உழவர்களைச் சார்ந்தே அமைகின்றது.... ❖





‘கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே
முன்தோன்றிய மூத்தமொழி– தமிழ்‘

# தமிழனின் திறமையும் பெருமையும்



அந்தத் தமிழ் மொழியை பேசுபவர்களின் வாழ்க்கை எங்கு இருந்து துவங்கியது பின் எங்குயெல்லாம் பரவியது வாழும் இடத்தில் எத்தகைய நாகரிகங்களை கொண்டுஇருந்தது என்பதற்கான ஆய்வுகளை குறிப்பிடுவதே இக் கட்டுரையின் நோக்கம்.

## குமரிக்கண்டம்

கர்ண பரம்பரை கதைகளாகவும் தொல்லியல் ஆய்வில் தேவைப்படும் ஆதாரங்களுக்காகவும் அயல்நாட்டினரால் இன்றும் ஆராய்ச்சிக்கு உட்படுத்தபட்ட இடமாகவும் உள்ள இந்திய பெருங்கடலில் மூழ்கிவிட்டதாக நம்பப்படும்



சென்னை ரேவதி ராதாகிருஷ்ணன்




குமரிக்கண்டம்.

சுமார் 20,000 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்தாக நம்பப்படும் குமரிக்கண்டத்தில் தமிழ் செழித்தோங்கி இருந்ததாகவும் ஏழு திங்கள் நாடு, ஏழு மதுரை நாடு, ஏழு முன்பாளை நாடு, ஏழு பின்பாளை நாடு, ஏழு குன்று நாடு, ஏழு குணகரை நாடு, ஏழு குறும்பனை நாடு ஆகிய நாற்பத்தி ஒன்பது நாடுகள் இருந்ததாகவும், தென்மதுரை, கபாடபுரம், முத்தூர், ஆகிய மூன்று நகரங்கள் மிகவும் நாகரீகத்தில் செழித்து இருந்ததாகவும், இங்கு வடக்கே பஃறுளி ஆறும் தெற்கே குமரி ஆறும் இருந்த தாகவும் மணிமலை உட்பட இரண்டு மலைகள் இருந்ததாகவும் வரலாற்றுச்செய்தி.

குமரிக்கண்டத்தில் தென்மதுரையில் முதல் தமிழ்ச் சங்கம் 4400 ஆண்டுகளுக்கு முன்பு 549 அறிஞர்களுடன் நடைபெற்றதாகவும், இடைச்சங்கம் 3700 ஆண்டுகளுக்கு முன்னர் 59 புலவர்களுடன் நடைபெற்றதாகவும், அங்கு இயற்றப்பெற்ற நூல்களில் தொல்காப்பியம் தவிர மற்றவை அழிந்துவிட்டதாகவும் நம்பப்படுகிறது.

“இக்கண்டம் கன்னியா குமரியில் இருந்து மடகாஸ்கர் முதல் ஆஸ்திரேலியா வரை இலங்கையை உட்படுத்தியதாக இருந்த நிலப்பரப்பு என்பது வரலாற்று ஆய்வு.



இக்கண்டம் கன்னியாகுமரியில் இருந்து மடகாஸ்கர் முதல் ஆஸ்திரேலியா வரை இலங்கையை உட்படுத்தியதாக இருந்த நிலப்பரப்பு என்பது வரலாற்று ஆய்வு. இக்கண்டத்திற்கு லெமூரியா எனவும், நாவலன்(ஜம்பு) தீவுயெனவும் அழைக்கப்பட்டதாக சொல்லப்படுகிறது. பின்னாளில் கடல்கோளினால் இக்கண்டம் அழிந்துவிட்டதாக கூறப்படுகிறது. இன்றும் அக்கண்டம் இருந்ததற்கான அடையாளமாக இருப்பவை லெமூர் என்ற பூனை இனமும், ஜம்புமகரிஷி கோத்திரம் (ஜம்பு நாவல்) என்று இன்றும் ஒரு இனத்தவர் தமிழ்நாட்டில் இருப்பதும், திருவானைக்காவல் ஈஸ்வரனுக்கு ஜம்புகேஸ்வரர் என்ற பெயரிருப்பதும் கண்முன்னே சாட்சிகளாக உள்ளன. மடகாஸ்கரில் உள்ள பழங்குடியினரும் ஆஸ்திரேலியாவில் உள்ள அபார்ஜிகள் என்ற பழங்குடிகள் வாழ்ந்து கொண்டிருப்பதும் ,அவர்களுடைய கடவுள் தமிழ்க் கடவுளான முருகன் என்பதும் அவர்களுடைய

மரபணுசோதனையில் அவர்களே உலகில் மூத்த வம்சத்தினர் என்பதும் கண்ணெதிரே இன்றும் நிதர்சனமாக உள்ளன.

## மாயன் கலாச்சாரம்

குமரிக்கண்டம் அழிந்தப்பிறகு அங்கு வாழ்ந்து இருந்த தமிழர்கள் உலகம் முழுக்க பரவ ஆரம்பித்து இருக்கின்றனர். மெக்ஸிகோவில் உள்ள மாயன் கோட்டையும், அங்கு உள்ள மாயன் நாள் காட்டியும் (காலெண்டர்) மிகவும் சிறந்ததாகவும் வியப்புக்கு உரியதாகவும் பேசப்பட்டது. அவர்கள் கட்டிடக் கலையிலும், வானியல் சாத்திரத்திலும், கணித அறி வியலிலும் நிகரற்றவர்களாக சொல்லப்படுகிறது. ஆனால் வானியல் சாத்திரத்திலும், கட்டிடக் கலையிலும் தமிழனின் நாகரீகத்தை ஒத்ததாகவே மாயன் நாகரீகம் உள்ளது. அண்டவெளியை ஆராய்ந்த தமிழன் சூரியனையே மற்ற கோள்கள் சுற்றிவருவதாகவும் பூமிக்குத் தாயான செவ்வாயில் தான் முதலில் உயிரினங்கள் வாழ்ந்ததாகவும், பூமி ஒரு நீலகிரகம் எனவும், இருப்பவற்றில் வியாழக்கிரகமே பெரிய மஞ்சளான கிரகமெனவும்,



அதுவே கிரகங்களுக்கு குரு எனவும், கருநீல நிறமான சனிகிரகம் மந்தமாக சுற்றிவரும் கிரகம் என்பதால் மாந்தன் என்றும், பெயரிட்டான்.

கோள்களின் இயக்கங்களை வைத்தே மனித உயிர்களின் இன்ப துன்பங்கள் நடைபெறுகிறது என்பதும், ஆகவே அவரவர் பிறந்த நேரத்தில் உள்ள கிரக அமைப்புகளை கொண்டு மனிதனின் வாழ்நாளை பனிரெண்டு கட்டங்களாக பிரித்து அந்த பனிரெண்டு கட்டங்களிலும் உள்ள ஒன்பது கோள்களும் ஒருமுறை அந்த கட்டங்களை சுற்றிவர 120 ஆண்டுகள் ஆகுமெனவும் அதுவே ஒரு மனிதனின் ஆயுளெனவும் கணிக்கப்பட்டது. இந்த வானவியல் கணிதமே மாயன்களின் பதிவேட்டுகளில் உள்ளதாக கூறப்படுகிறது.

மாயன் என்ற சொல்லே தமிழகத்தில் வழங்கப்படுகிற தேவசிற்பியான மயனெனும் சொல்லே மாயனென கூறப்படுவதாக இருக்கலாம். தமிழ் மன்னனான இலங்கையை ஆண்ட இராவணனின் மாமனாரான மயன் ஒரு தங்கக்கோட்டையை இராவணனுக்காக கட்டியதாக நம்பப்படுகிறது, ஆக கட்டிடக்கலை வல்லுநர்களை மயன் என்று அழைத்து இருக்கலாம் இன்றும் மெக்ஸிகோவில் உள்ள மாயன்கோட்டையின் முன்னின்று கைதட்டினால் அந்த சத்தம் கோட்டையின் உள்ளிருந்து மயில் அகவும் சத்தமாக கேட்கின்றது. கோட்டையின் மதில்சுவற்றில் பாம்பு மேல்பக்கம் இருந்து கீழ் இறங்கி வருவதாக சிற்பங்கள் செதுக்கப்பட்டு உள்ளன. தமிழ் கடவுளான முருகனுக்கு மட்டுமே பாம்பும் மயிலும் சின்னங்களாக உள்ளன, அவை மாயன் கோட்டைக்கு சென்றது எவ்வாறு? இப்பொழுதும் நான் அங்கு சந்தித்த ஒரு வழிகாட்டி மனிதரின் பெயர் அம்பலம் பெர்னாண்டஸ். நாமே மறந்து போன திருச்சிற்றம்பலம் என்னும் சொல் இன்னும் அவர்கள் பெயரில் வாழ்ந்து கொண்டுஇருக்கிறது. அங்கு கிடைக்கும் வழுவழுப்பான கருமையான நிறம்கொண்ட சாளகிராமம் போன்ற கற்களில் இருந்து தான் சிவலிங்கங்கள் செய்யப் பட்டதாக செவிவழி செய்தியாக கூறப்படுகிறது. இன்றும் அங்கு உள்ள பழங்குடியினரின் ஆடையாக இருப்பது தமிழ் நாட்டு குடியானவரின் ஆடையென கருதப்படும் அரையாடை மட்டுமே, ஆக இத்தனை ஒப்பீடுகளையும் நோக்கினால் மாயன் வேறு தமிழன் வேறுஅல்ல.

## உலகத் தமிழர் வரலாறு

மெக்ஸிகோவில் இருந்து பரவ ஆரம்பித்த தமிழ் இனம் அமெரிக்கா, ஆப்பிரிக்கா, ஈரான், ஈராக் சீனாவரை பரவியுள்ளது. மாயன் கோட்டையில் ஆரம்பித்து சீனா வரையிலும் உள்ள பிரமிடுகள் அனைத்தும் ஒரே நேர்கோட்டில் உள்ளவையாக கூறப்படுகிறது. உள்நாட்டிலும் சரி வெளிநாட்டிலும் சரி புவியியல் அமைப்பை சரியாக கண்டறிந்தவன் தமிழன் மட்டுமே. இன்றும் பிரமிடுக்கு பெருவீடு என்ற பெயர் இருந்ததாக சொல்லப்படுகிறது. எகிப்தில் உள்ள நைல் நதி நீலநதி என்று அழைக்க பட்டதாகவும், கீசாவில் (எகிப்து) உள்ள மூன்று பிரமிட்களும் வானிலுள்ள நடராஜருக்குரிய நட்சத்திரமான திருவாதிரையையும் மற்றும் ரோகிணி, மிருகசீரிஷம் ஆகிய மூன்று நட்சத்திரங்களை நோக்கும் வகையில் கட்டப்பட்டு இருப்பதாகவும் கூறப்படுகிறது. "தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி" என்பதன் பொருள் இதனால் புரிகிறது அல்லவா!

**(வளரும்)**

தியாகதுருகம் கு. வளர்மதிச் செல்வி



# இலக்கிய ஆராய்ச்சி

**இலக்கியம் என்பது ஒரு கலை இதை டாக்டர் மு. வ. அவர்கள் இலக்கிய ஆராய்ச்சிக் கட்டுரையில் மிக அற்புதமாக விளக்கியிருப்பார்.**



மல்லிகை பந்தலின் கீழே மாலை நேரத்தில் நின்றபடியே ஒருவன் ஆராய்ச்சி செய்கிறான் அந்த மல்லிகைச் செடி அங்கே எப்படி வளர்ந்தது? யார் முதலில் நட்டார்கள்? இந்த நிலத்தை ஏன் தேர்ந்தெடுத்தார்கள்? என்றெல்லாம் ஆராய்கிறான்.

இரண்டாவது ஒருவன் வருகிறான் இந்த மல்லிகை மண்ணின் சத்து நீர், சூரிய ஒளி,காற்று இவற்றை எல்லாம் உணவாக்கி எப்படி இலை விடுகிறது, பூக்கிறது பூவிற்கு மணமும் நிறமும் எப்படி வருகிறது என்று ஆராய்கிறான்,

மூன்றாவதாக ஒருவன் வருகிறான், அந்தப் பந்தலைச் சுற்றிச் சுற்றிப் பார்க்கிறான் பூக்களின் நறுமணத்தை முகர்ந்து முகர்ந்து என்ன மணம்? என்ன மணம்? என்று மகிழ்கிறான் தன்னை மறந்து நெடுநேரம் நிற்கின்றான் அந்த மல்லிகைப் பந்தலை விட்டு பிரிய மனமில்லாமல் நெடுநேரம் கழித்து பிரிகிறான், அந்த மல்லிகையின் காட்சியையும் நறுமணத்தையும்

அடிக்கடி நினைத்துக் கொண்டே தன் கடமைகளை செய்கிறான், மற்றவர்களிடமும் சொல்லிச் சொல்லி மகிழ்கிறான்.

இந்த மூவரையும் ஆராய்ச்சியாளர்கள் என்றே கூற வேண்டும்.

மூவருக்கும் வேறுபாடு உண்டு.

முதலில் வந்தவன்.... மல்லிகைப் பந்தலின் வரலாறு ஆராய்ந்து மல்லிகைப்பூ விற்று பணம் சேர்க்கும முயற்சி.

இரண்டாவது வந்தவன் :

தாவரவியல் ஆராய்ச்சி செய்தான் அவனுக்கு மல்லிகை பந்தலாக இருந்தாலும் ஒன்றே! அடர்ந்த கள்ளியும் ஒன்றே! அவனுக்கு உள்ளது அறிவுப்பசி ஆகையால் தாவரவியல் ஆராய்ச்சி.

மூன்றாவது வந்தவன்... அறிவுக்கு உணர்வுக்கும் விருந்தளித்தும் மகிழ்கிறான். இயற்கை என்ன பயன் கருதி அதை வளர்த்ததோ? அந்த சிறந்த பயனைக் கண்டவன் அவன் தான்!

அவன் செய்த ஆராய்ச்சியின் பயன் என்ன? என்று அவனைக்கேட்டால் தான் உணர்ந்ததை முற்றிலுமாக சொல்ல முடியவில்லையே என்று திகைப்பான். அதன் பயனாய் தானும் இன்புற்று மற்றவரையும் இன்புறச்செய்வான்

தான் இன்புறுவதும் உலகம் இன்புறுமாறு தூண்டுவதுமே அவனுடைய ஆராய்ச்சியின் பயனாகும். ❖

# சித்தர்கள் எனும் சீர்திருத்தவாதிகள்

**சித்தர்கள் தங்களுக்கென்று தனி வாழ்வியல் வழிமுறைகளைக் கொண்டு நாடு, நகர், மொழி, இனம் கடந்து இயற்கையோடு இயைந்த வாழ்க்கையை வாழ்ந்தவர்கள்.**

சித்தர்கள் என்றால் சித்த மருத்துவம் மட்டுமே நம்மில் பலருக்கு நினைவுக்கு வருவதுண்டு. ஆனால் சாதி சமய வேறுபாடுகளால் பிளவுண்டு கிடந்த தமிழ்ச்சமுதாயத்தை ஓர் அணியில் திரட்டுவதற்கு சித்தர்கள் நம் பாடல்கள் வாயிலாகப் பெரும் பங்களிப்பைச் செய்துள்ளனர். திருமூலர், இராமதேவர், கும்பமுனி, இடைக்காடர், தன்வந்திரி, வால்மீகி, கமலமுனி, போகர், மச்சமுனி, கொங்கணர், பதஞ்சலி, நந்தி தேவர், கருவூரார், பாம்பாட்டி சித்தர், சட்டை முனி, சுந்தரானந்தர், குதம்பைச் சித்தர், கோரக்கர் என்பவர்கள் பதினெண் சித்தர்களாகப் போற்றப்பட்டனர்.

திருமூலர் காலத்திலிருந்து நவீன காலம் வரை தமிழகத்தில் வாழ்ந்த சித்தர்கள் பல சாதனைகளைப் புரிந்துள்ளனர். சித்தர்கள் என்பவர்கள் சித்திகள் கைவரப் பெற்றவர்கள். சாதி, சமயம், சடங்கு என்று சமூகம் முடங்கி கிடந்த



முனைவர் சி.முத்துமாலை







காலத்தில் அக்கட்டுகளை உடைத்தெறிந்தவர்கள் சித்தர்கள். சித்தர்களின் வைத்திய முறைகள் என்பது காலத்தால் மிகப் பழமையானது. மனித குலத்தைக் காக்கும் பொருட்டு மனித வாழ்க்கைக்குத் தேவையான அனைத்து ஆரோக்கிய முறைகளையும் மிக எளிய வைத்திய முறைகளையும் அரிய மூலிகைகளைக் கொண்டு மனித குலத்தைக் காத்துள்ளனர். மருத்துவத்தைத் தாண்டி சமூக சீர்திருத்தத்திற்கும் தன் பங்களிப்பைச் செய்தவர்கள் என்பதை அவர்களது பாடல்களைப் படித்தால் மட்டுமே நாம் அறிய முடியும்.

'சித்' என்றால் அறிவு. அறிவுவடிவமாகத் தன்னை ஆக்கிக்கொண்டவர்கள் சித்தர்கள். இவர்களை 'அறிவர்' எனத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. நிறைமொழி மாந்தர் என்று பழந்தமிழ் நூல்கள் சித்தர்களைக் குறிப்பிடுகின்றன.

மருத்துவம், யோகம், இரசவாதம், சோதிடம் போன்ற பல்துறை அறிவு பெற்ற சித்தர் பாடல்களில் சமுதாய மேம்பாட்டிற்கு அதிக முக்கியத்துவம் அளித்துள்ளதை நாம் காண முடிகிறது. மூடப்பழக்கவழக்கங்கள் சாத்திர சம்பிரதாய சடங்குகளால் தங்கள் அறிவை இழந்து நின்ற மக்களுக்குத் தம் பாடல்கள் மூலம் பல உயரிய சிந்தனைகளைச் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தமிழ் இலக்கிய வரிசைகளில் சித்தர் இலக்கியங்கள் சிறப்பானதொரு இடத்தைப் பெற்றுள்ளன. சாதி சமய சடங்குகளைக் கடந்து சமூகத்தில் பயனுடையவை எவை என்பதையறிந்து அது பற்றிய சிந்தனைகளை மக்களிடையே கொண்டு செல்லும் அறிஞர்களாகவும் சமுதாயத்தின் ஏற்றத் தாழ்வுகளை மாற்றக் கருதிய சீர்திருத்தவாதிகளாகவும் சித்தர்கள் வாழ்ந்தனர் என்று கூறினால் அது மிகையல்ல.

**"சாதியொன்றில்லை சமயம் ஒன்றில்லையென்றே**
**ஓதியுணர்ந்தறிவாய் குதம்பாய்"**

என சாதி சமய வேறுபாடுகளைக் களைய முயன்ற சித்தர்கள் சகுனங்கள் பார்க்கும் மூட நம்பிக்கைகளையும் எதிர்த்துள்ளனர்.

**"காலை மாலை நீரிலே முழுகுமந்த மூடர்காள்**
**காலை மாலை நீரிலே கிடந்த தேரை என் பெறும்"**

என்று சிவவாக்கியார் கேள்வி கேட்கிறார். இதன் மூலம் வேதங்கள் ஓதுதல் மற்றும் பிற சடங்கு முறைகளையும் சித்தர்கள் நிராகரித்துள்ளதை நாம் அறியலாம். ஆசையே துன்பத்திற்கு அடிப்படைக் காரணம் என்னும் தத்துவத்தை இந்த உலகிற்கு போதித்தவர்களில் சித்தர்களுக்கும் பெரும்பங்கு உண்டு.

**"ஆசை வலை பாசத்து அகப்பட்டு மாயாமல்**
**ஓசை மணித்தீபத்தில் ஒன்றி நிற்பது எக்காலம்"**

என்று கேட்கிறார் பத்திரகிரியார். ஆசை அளவோடு இருக்க வேண்டும் என்று சொல்லும் வழக்கத்தைக்கூட சித்தர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆசையை அறவே துறக்க வேண்டும் என்பதையே அவர்கள் தம் பாடல்களில் வலியுறுத்தியுள்ளனர்.

சாதிக் கொடுமைகள் காரணமாகத் தோன்றும் பேதங்கள் சித்தர்களுக்கில்லை. இறைவன் படைப்பில் எல்லோரும் சமம். அவர்களில் உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற வேறுபாடு காண்பது தவறு என்று சுட்டிக்காட்டியவர்கள் சித்தர்கள். இவர்கள் தம் வாழ்க்கை முறையில் எப்போதும் எந்நிலையிலும் சாதி வேறுபாடும் தீண்டாமை என்ற பாகுபாடும் நுழையாதவாறு எச்சரிக்கையோடு வாழ்ந்ததை அவர் தம் பாடல்கள் நமக்கு வெளிப்படுத்துகின்றன.

சித்தர்கள் சமுதாயத்தின் கேடுகளைக் கண்டு மனம் வருந்தியதால் தான் மக்கள் சமுதாயத்தோடு ஒன்றி சமுதாயத்தின் குரலிலே சித்தர்கள். தம் பாடல்களை இயற்றியுள்ளனர். ஏற்றத்தாழ்வற்ற சமுதாயத்தை உருவாக்க மக்களுக்கு அறிவுரைகள் கூறி நெறிப்படுத்தியுள்ளனர்.

**"நீரிலே முளைத்தெழுந்த தாமரையின் ஓரிலை**
**நீரினோடு கூடி நின்றும் நீரிலாதவாறு போல்**
**பாரிலே முளைத்தெழுந்த பண்டிதப் பராபரம்**
**பரிவோடுகூடி நின்ற பண்பு கண்டிருப்பீரே"**

என்ற பாடல் பற்றற்றவர்களின் நிலையை எடுத்துரைக்கிறது. பாம்பாட்டி சித்தர் கடலுக்கும் கப்பலுக்கும் இடையே உள்ள தொடர்பை ஞானியர்க்கும் உலகத்திற்கும் இடையே உள்ள தொடர்பு என்கிறார். கப்பல் நீரிலே மிதக்கலாம். ஆனால் கப்பலுக்குள் நீர் வந்தால் அனைத்தும் அழிய நேரிடும் என்ற கருத்தினை மிக எளிமையாகக் கூறிச் செல்கிறார். சமூகத்தில் ஞானிகள் கலந்தே வாழ்ந்தாலும் சமூக ஆசைகள் அவர்களை

ஆட்கொள்ளக்கூடாது. புளியம்பழமும், தோடும் போலவே ஒட்டாமல் இருக்க வேண்டும் என்பதை உணர்த்தியுள்ளனர். மக்கள் தொண்டு, மனிதாபிமானம், சமூக நோய்கள், மூடப்பழக்க வழக்கங்கள் போன்றவற்றுக்கும் சித்தர் பாடல்களுக்கும் இடையே உள்ளத் தொடர்பு குறிப்பிடத் தக்கது.

"மக்கள் தொண்டே மகேசன் தொண்டு" என்பர். திருமந்திரத்தில் திருமூலர் கோயிலில் உள்ள தெய்வத்திற்குத் தருவது மனிதனைச் சென்றடைவதில்லை. ஆனால் மக்களுக்குச் செய்யும் தொண்டு இறைவனைச் சென்றடைகிறது என்கிறார்.

**படமாடக் கோயில் பகவர்க்கு ஒன்று ஈயின்**
**நடமாடக் கோயில் நம்பர்க்கு அங்கு ஆகா**
**நடமாடக கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயில்**
**படமாடக் கோயில் பகவற்கு அது ஆமே"**

திருமூலர் வாக்கு. பிறர் துன்பம் கண்டு தாங்காமல் மனமிரங்கும் கருணை உள்ளமே மனிதாபிமானம் ஆகும் என்பதை உணர்ந்த சித்தர்கள் மனித குலத்தின் உயர்விற்கும் ஒற்றுமைக்கும் பொதுவான சிந்தனைகளைத் தம் பாடல்களின் வழியே வெளிப்படுத்தியமைப் புலனாகிறது.

சித்தர்களுடைய கடவுள் கொள்கையின் அடிநிலை ஆதாரமாக விளங்குவது உடம்பே ஆகும். உடலானது இறைவனால் இம்மண்ணுலகில் படைக்கப்பட்டக் கருவியாக எண்ணிய சித்தர்கள் எளிய வாழ்க்கையையே வற்புறுத்துகின்றனர். பரமாத்மா குடியிருக்கும் இடம் நமது உடல்தான் என்றும் நாம் கடவுளைத் தேடி எங்கும் அலைய வேண்டாம் என்பதையும் சுட்டிக் காட்டியவர்கள். எளிய உணவு, இயற்கை உணவு, மிதமான உணவு போன்றவற்றால் தம் உடலைப்பேணிக் காத்தனர்.



**"மிக்க உயிர் போன பின்பு மண்ணை விழுங்க**
**மெய்யாக கண்டோ மென்றாடு பாம்பே"**

என்ற பாம்பாட்டி சித்தரின் பாடல் பல்வேறு பலகாரங்களைத் தின்று உடலை வலைத்தாலும் உயிர் போன பின் அந்த வாய் மண்ணைத் தின்னும் என்பதை உணர்ந்துகொள் என்று அறிவுறுத்தியது.

உடலைப் பேணுவதற்கான மற்றொரு வழிதான் மனத்தூய்மை. மனத்தைக் கட்டுப்படுத்த வேண்டும். மனத்தூய்மைக்கும் உடலுக்கும் தொடர்பு உண்டு. தீய எண்ணங்கள் இன்றி மனதை அடக்கினால் தான் ஆன்மநிலை கிட்டும் என்கின்றனர் சித்தர்கள்.

**"மனமென்னும் மட்டங்கிற் றாண்டவக் கோனே! முக்தி**
**வாய்த்ததென் றெண்ணேடா தாண்டவக்கோனே"**

என்ற இடைக்காட்டுச் சித்தரின் பாடல் மனதை மாடாக உருவகப்படுத்துகிறது. அடக்கப்படாமல் கட்டுக் கடங்காது திரியும் மாடு அருகில் உள்ளவர்களுக்குத் துன்பம் செய்யும். அதுபோலவே கட்டுப்பாடில்லா மனமும் பிறருக்குத் தீங்கினை விளைவிக்கும்.

**"மனமது செம்மையானால் வாசியை நிறுத்த வேண்டா**
**மனமது செம்மையானால் மந்திரம் செம்மையாமே"**

என்று அகத்தியரும் மனச்செம்மையால் ஏற்படும் பலன் குறித்து விளக்கியுள்ளார்.

உலக நடப்புகளை சித்தர்கள் இயல்பாகத் தம் பாடல்களில் பதிவு செய்துள்ளனர். மந்திரம், சித்து இரசவாதம், சோதிடம் என மக்களைத் தவறான வழியில் திருப்பியவர்கள் என்ற நிலையிலிருந்து மாற்றி ஆலயம் எனத் தூய்மையான வழி பாட்டையும் உடலையும் உள்ளத்தையும் உறுதி செய்யும் வழிவகைகளையும் உலக மக்களுக்குத் தம் பாடல்களின் மூலம் உணர்த்திய ஞானிகளாக சித்தர்கள் விளங்கினர்.

சித்தர்கள் இயற்கையின் புத்திரர்கள். இயற்கை வைத்தியமும் தத்தவமும் ஞானமும் அவர்களுக்கு இயற்கை அளித்த கொடை இவர்கள் சமூகப் புரட்சியாளர்களாகவும் சீர்திருத்தவாதிகளாகவும் கருதப்பட்டனர். இவர்கள் மனித முன்னேற்றத்திற்குத் தடையாக இருந்த மூட நம்பிக்கைகளைத் தம் பாடல்களால் தகர்த்தெறிந்த சமூகப் புரட்சியாளர்கள். இனி சித்தர்கள் என்றால் சித்த மருத்துவம் மட்டுமின்றி அவர்கள் அருளிய நற்கருத்துகளும் நம் நினைவுக்கு வருமல்லவா? சமூக நலனில் அக்கறை கொண்ட சித்தர்களின் பாடல்களை இன்றைய இளைய தலைமுறைக்கு எளிய முறைகளில் எடுத்துச் சொல்ல வேண்டிய கடமை நம் ஒவ்வொருவருக்கும் உண்டு.

சித்தர் பாடல்களை வாசிப்போம்! சீர்திருத்தக் கருத்துகளை சுவாசிப்போம்! ❖

# உன்னை நீ...உணர்...!

**இ**ப்புவியில் நம்மைச் சுற்றி கண்ணுக்குத் தெரிந்தும் தெரியாமலும் வாழ்ந்துக் கொண்டிருக்கின்ற அனைத்து உயிரினங்களின் தோற்றத்தின் நோக்கம் என்ன...? என்றைக்காவது இந்தக் கேள்விக்கான பதிலை யோசித்து இருக்கிறோமா...?

ஆனால் இக்கேள்விக்கான பதிலை இப்பூமியில் வாழும் மானிட சமூகத்தால் மட்டுமே கண்டறிய முடியும் என்னும் பதில் நமக்குள் ஆச்சரியத்தை தருகிறதல்லவா...? ஆம்...! மனித உயிர்களுக்கு மட்டும் தான் அனைத்தையும் ஆய்ந்து அறிந்து உணரக் கூடிய சிந்தனை சக்தி என்னும் ஆறாவது அறிவு படைக்கப் பட்டுள்ளது.

அப்படியென்றால், இப்புவியில் வசிக்கும் மற்ற உயிர்கள் அனைத்தும் தேவையற்றவையா...? இருந்தும் ஏன் அவைகள் படைக்கப் பட்டிருக்கின்றன என்ற கேள்வி மனதில் எழுகிறதல்லவா...?

வாருங்கள்...! அதற்கான பதிலைத் தேடி தொடர்ந்து பயணிப்போம். எல்லா உயிர்களும் சமமா...? அதைப்பற்றி அறிய முற்பட்டாலே,



நெல்லை க.சோமசுந்தரி



நம் பிறப்பின் நோக்கத்தை அறியும் முயற்சியில் நாம் எடுத்து வைக்கும் முதல்படி...!

இன்றைய நவீன அறிவியல் வளர்ச்சியின் தாக்கத்தினால் உழன்று கொண்டிருக்கும் நம் மானிட சமூகமானது மற்ற உயிரினங்களைப் பற்றி சிறிதும் எண்ணாமல் அவற்றை எப்படியாவது தனக்கு பயன் படுத்தும் நோக்கத்துடனேயே அணுகுகிறது என்பது ஒரு கசப்பான உண்மை.

மற்ற உயிரினங்களைப் பற்றி நாம் ஏன் சிந்திக்க வேண்டும் ...? நமக்கு தேவை என்றால் அவ்வு யிரை தன் முயற்சியினாலோ அல்லது விலைகொடுத்தோ எளிதில் அடைய முடியும்.



உங்களுக்கு ஒன்று தெரியுமா...?

நாம் மிகச் சிறியதாக நினைக்கும் தேனிக்களின் இனம் அழிந்து விட்டால் உலகில் உள்ள அனைத்து உயிரினங்களும் அழிந்து விடும். ஏன் மனித இனமே காணாமல் போய் விடும். இதை கேட்டால் உங்களுக்கு வியப்பாக கூட இருக்கலாம்.

தேணீக்களால் உங்களுக்கு என்ன பயன்...? தேணீக்களுக்கும் நமக்கும் என்ன சம்பந்தம் ...? யோசிக்கும் போது உங்களின் மனம் கேள்விக்கணைகளால் துளைக்கப் படலாம்.

மிகச் சிறிய உயிரியான தேணீக்களின் மூலம் தான் அனைத்து வகையான தாவரங்களும், ஏன் நாம் உட்கொள்ளும் உணவு தானியங்கள் உட்பட, ஒட்டு மொத்த தாவர இனங்களிலும் மகரந்த சேர்க்கை நடைபெறுகிறது.

மகரந்த சேர்க்கை என்றவுடன் உங்களின் நினைவில் சிறிய வயதில், பள்ளிக் கூடத்தில் அறிவியல் பாடத்தில் படித்தவை அலை அலையாய் நினைவில் வரும்.

மகரந்தச்சேர்க்கை எனும் தொடர் நிகழ்வு நடைபெறவில்லை எனில் தாவரங்களில் பூக்கும் பூவானது காயாகாமல், கனியாகாமல் பூவிலேயே கருகிவிடும். இதனால் மானுட சமூகம் மட்டுமின்றி, தாவர வகைகளை உண்ணும் அனைத்து உயிர்களும் அழிவு நிலைக்குத் தள்ளப்படும். தாவர உண்ணிகள் அழிந்தால் சொல்லவே வேண்டாம் , மாமிச உண்ணிகளின் இயக்கமும் அழிந்துவிடும்.

இதை நினைக்கும் போது நமக்கு வியப்பாக தோன்றும் ஆனால் என்றைக்கேனும், சின்னஞ் சிறிய உயிரியான தேனீக்களின் முக்கியத்துவத்தின் ஆழத்தை நாம் உணர்ந்திருக்கிறோமா...?

இப்போது உங்களுக்குத் தெரிந்திருக்கும்... தேணீக்களினுள் இருக்கும் ஒரு சின்னஞ் சிறிய சக்தி ஒட்டு மொத்த உயிரினங்களின் இயக்கத்தை இயக்கும் ஒரு தூண்டுகோலாய் அமைகிறது என்பது நமக்கு திகைப்பை தருகிறதல்லவா...?

ஒரு சிறிய உயிருக்குள்ளேயே உள்ள திறனானது பண்மடங்காய் இருக்கும் போது, ஆற்றிவு கொண்ட மானிட சமூகத்தின் உள்ளுக்குள் உறைந்திருக்கும் சக்தியானது அளப்பறியது என்பதனை நம்மால் உணர முடிகிறதல்லவா...?

> **“ மகரந்த சேர்க்கை என்றவுடன் உங்களின் நினைவில் சிறிய வயதில், பள்ளிக் கூடத்தில் அறிவியல் பாடத்தில் படித்தவை அலைஅலையாய் நினைவில் வரும்.**

அதனை அறியவே இத்தொடரில் நாம் பயணிக்க இருக்கிறோம். மனிதனுக்குள் இருக்கும் சக்தியை அறிய அகத்தை நோக்கிச் சிந்திக்க வேண்டும். இதனை நாம் அகச்சிந்தனை என கொள்ளலாம் .

அப்படியானால், அகச் சிந்தனை என்பது என்ன...? இப்போது அகச்சிந்தனைப் பற்றிப் பார்ப்போமா...?

ஒரு சிறிய கிராமத்தில், நள்ளிரவு வேளையில் இடி, மின்னல், பெரும் புயல் அடிக்கும் இக்கட்டான சூழலில், பிரசவ வலியால் ஒரு பெண் துடித்துக் கொண்டிருக்கிறாள். குழந்தை வெளி உலகை காண்பதற்கு முன்பே பிரசவம் பார்க்கும் மருத்துவச்சி, இந்த மாதிரி அபச குணத்திலா ஒரு குழந்தை பிறக்க வேண்டும்...?

"இருளின் குழந்தை இது" என்று வருத்தப்பட்டாள். ஆனால், மேலே வானில் வெட்டும் மின்னலை ஓரக்கண்ணால் பார்த்தபடியே அக்குழந்தையின் தாய் புன்முறுவலோடு, "இல்லை... இது ஒளியின் குழந்தை" என்று உற்சாகமாய் பதிலளித்தாள். ஆம்....! அந்தக் குழந்தை தான் பின் வரும் காலங்களில் மிகச் சிறந்த, அளப்பறிய அறிவியல் கோட்பாடுகளையும், தத்துவங்களையும் உருவாக்கியது. அந்தக் கோட்பாடுகளும், தத்துவங்களும் தான் இன்றைய நவீன அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியின் ஆணிவேராய் உலகெங்கும் பரந்து பட்டுத் திகழ்கிறது.

அந்தக் குழந்தையை.... அடுத்த இதழில் சந்திப்போம்...!

**.... உணர்வுகள் தொடரும்...**

பெங்களூர் ர.தேன்மொழி


# போற்றப்படுகிறதா பெண்ணியம்..?



முன்னுரை: ஆணும் பெண்ணும் ஒன்றாக கலந்தே சமூகம் என நம்மால் வரையறுக்கப்படுகிறது. ஆனால், அறிவியல் வளர்ச்சியடைந்ததாக நம்பப் படும், சொல்லப்படும் மேலை நாடுகள் உட்பட ஏறக்குறைய உலக உருண்டையில் உள்ள அத்துணை நாடுகளிலும் பெண்களுக்கான சமத்துவம் கொடுக்கப்படுவதாக கருத்து நிலவுகிறதே தவிர உண்மையில் முழு சுதந்திரம் கொடுக்கப்பட்டுள்ளதா என்பது கேள்விக்குறியே.!

மங்கையராய் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திடல் வேண்டுமம்மா என்ற கவிமணியும் பெண்ணின் பெருமை, பெண் என பாவேந்தர் பாரதிதாசன், தி.ரு.வி.க, போன்ற பல எழுத்தாளர் களும், கவிஞர்களும் படைப்பாளிகளும் சென்ற நூற்றாண்டிலிருந்தே போர்க்கொடி உயர்த்திய போதும், இன்றும் பெண்களுக்கான உரிமைகள் பல்வேறு சமயங்களில் சூழலுக்கேற்ப மறுக்கப் படுகின்றன.

பெண்ணிய விதைகள்: 19ஆம் நூற்றாண்டில் மேலை நாடுகளில் தோன்றிய பெண்ணிய இலக்குகள் பெண்களுக்கான வாக்குரிமை, சொத்துரிமை, போன்றவற்றை முன்னிறுத்தியது.இரண்டாம் கட்ட பெண்ணிய இலக்காக பெண் ஒடுக்குமுறைகளை.. குறிப்பாக பாலியல் வன்முறை, குடும்பம், வேலைப் பார்க்கும் தளங்களில் ஏற்படுத்தப்படும் தடைகளை தகர்க்க பெண்ணிய விதைகள் ஆழமாக சமூகத்தில் ஊன்றப்பட்டன. மூன்றாவதாக 1960 களுக்கு பிறகு முதல் இரண்டு பெண்ணிய அலைகளில் அடித்து செல்லப்பட்ட விடயங்கள் ஆணித்தரமாக வரதட்சணை கொடுமைகள், பாலியல் தொல்லைகள், பெண் சிசுக் கொலை, பெண்களுக்கு வாய்ப்பளிக்கும் வகையில் அரசியலமைப்பு திட்டங்கள், தனது பிறந்த வீட்டில் சொத்துரிமை. பெண் கல்வி போன்றவை அதிகமாக பேசப்பட்டது. தொடர்ந்து தீர்வுகளாக சட்டங்களும் பல திட்டங்களும் நிறைவேற்றப்பட்டன. குறிப்பாக தமிழகத்தில் முன்னாள் முதல்வர் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் “பெண் சிசுக் கொலை“ தடுப்பதற்காக தொட்டில் குழந்தை திட்டமாகவும், “பெண் குழந்தை கருக்கலைப்பு“ தண்டனைக்குரிய குற்றமாகவும் சட்டமாக்கப்பட்டது என்பது பாராட்டத்தக்கது.



உலகத்தை எதிர்காலம் நோக்கி நகர்த்தக் கூடிய வினாடி முள் போன்று வேகமான, விவேகமான முறையில் பல துறைகளில் முந்திக் கொண்டு செல்பவர்களாக மகளிர் மாற்றத்தை ஏற்படுத்துகின்றனர். இன்று அறிவியல், இலக்கியம், அரசியல், , விளையாட்டுத்துறை, ஊடகங்கள் போன்ற பல துறைகளில் பெண்களின் திறமைகள் பன்முகத் தன்மையால் பரிமளிக்கிறது. தற்போது விண்வெளித் துறையிலும் பெண்களின் பங்கை சளைக்காது ஆற்றிவருகின்றனர்.

இருந்தாலும். போற்றப்படுகிறதா பெண்ணியம்?

பெண்ணியம் என்பது மகளிரை தாழ்த்தக்கூடிய வகையில் சமுதாயம், குடும்பம், அரசியல், பொருளா தார ரீதியில் உள்ள கட்டமைப்புக்களை மகளிருக்கான உரிமைகளை, சுதந்திரத்தை மக்களிடையே நிலைநிறுத்த வேண்டும் என்ற கொள்கையாக தொடங்கப்பட்டது என்பது மட்டுமே. அதன் அடிப்படையில்...

**“பெண்மை வாழ்கவென்று கூத்திடுவோமடா,** பெண்மை வெல்கவென்று கூத்திடுவோமடா, உயிரைக் காக்கும் உயிரினைசேர்த்திடும் உயிருக்குயிராய் இன்பமாகி விடும், உயிரினும் இந்த பெண்மை இனிமையடா.”

என்று கூத்திட்ட பாரதியின் வரிகளை உலகெங்கும் கொண்டு செல்வோம். “நீரின்றி அமையாது உலகு“ என்பதாலே பெண் பெயர்களை வற்றாத ஜீவநதிகளுக்கு சூட்டி அழகுப் பார்க்கும் நம் நாட்டில் பெண்ணினம் மேம்பட நம்மால் இயன்ற நல்ல மாற்றங்கள் வீடுகளிலும் சமூகத்திலும் வரவேற்று பெண்ணியம் வளர்ப்போம். பெருமைக் கொள்வோம்! ❖

# முதல் மொழி தமிழ்!







தமிழ் இந்தியாவில் பேசப்படும் மொழிகளில் மிக நீண்ட இலக்கிய, இலக்கண மரபுகளைக் கொண்டது. தமிழ் என்னும் சொல்லின் பிறப்பு பற்றி மொழி அறிஞர்கள் பலர் பல கருத்துக்களைப் பதிவு செய்துள்ளனர். அவற்றுள் கவனிக்கத்தகுந்தவை:

*தமிழ் என்பது "தம்மிழ்" அதாவது "தனது மொழி" என்றும், "தம்இழ்" அதாவது "தன்னிலிருந்து மலர்ந்து வரும் ஒலி" என்றும் பொருள் விளக்கம் கொடுத்துள்ளனர்.*

ஆ.கு.நிறைமதி





இலக்கண அடிப்படையில் தமிழ் ஒரு ஒட்டு நிலை மொழியாகும். அதாவது ஒரு சொல்லின் தன்மையினை விளக்க அதனுடன் பின்னொட்டு சேர்க்கப்பட்டு அதன் பெயர், வகை, எண், வேற்றுமை, காலம் ஆகியவை விளக்கப்படுகின்றன.

தமிழ் இலக்கணம் பெருவாரியாகத் தொல் காப்பியத்தில் விவரிக்கப்பட்டுள்ளது.

**"உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே**
**அஃறிணை என்மானார் அவரல பிறவே**
**ஆயிரு திணையின் இசைக்குமன் சொல்லே"**

எனத்துவங்கும் தொல்காப்பிய சொல்லதிகாரம் "மக்கள்" என வழங்கப்படுபவர்களை புலவர்கள் உயர்திணை என்றும், மக்கள் அல்லாத பிறவற்றை அஃறிணை என்றும் கூறுவர். இந்த இரு திணைகள் கொண்டே சொற்கள் அமையும். எனவே சொல் என்பது உயர்திணை, அஃறிணை என இரண்டு வகைப்படும் என்று விளக்கியுள்ளது. மேலும் தொல் காப்பியம் இலக்கணத்தில் பால், எண், வேற்றுமை, காலம், சொல் என பலவற்றின் பயன்பாட்டினை விளக்கியுள்ளது.

தற்கால தமிழ் இலக்கணம் பெரும்பாலும் நன்னூலைத் தழுவியே அமைந்துள்ளது. 13ம் நூற் றாண்டில் எழுதப்பட்ட நன்னூலில் தொல்காப்பிய நெறிமுறைகள் தெளிவுபடுத்தியுள்ளது. தொல் காப்பியத்திற்கும் நன்னூலுக்கும் இடைப்பட்ட காலம் சுமார் 1700 ஆண்டுகள் ஆகும்.

"எண்பெயர் முறைபிறப்பு உருவம் மாத்திரை முதல் ஈறு இடைநிலை போலி என்றா பதம்புணர்பு எனப்பன் னிருபாற்று அதுவே"

எனக்கூறும் நன்னூல் தமிழ் இலக்கணத்



தின் அனைத்து கூறுகளையும் விளக்குகிறது.

தமிழ் சொல்வளம் நிறைந்த மொழி. நவீனத் தமிழ்மொழி, பழந்தமிழ் மொழியில் பயன்படுத்தப்பட்ட பெரும்பாலான சொற்கள் இன்னும் பயன்பாட்டில் கொண்டுள்ளது. பெரும்பாலான இந்திய மொழிகளைப் போலன்றி தமிழில் மூச்சைக் கொண்டு ஒலிக்கும் மெய்யெழுத்துக்கள் கிடையாது. பேச்சில் வழங்கிவரினும், தமிழ் எழுத்து மிடற்றொலிகளையும், பிற ஒலிகளையும் வேறுபடுத்துவதில்லை. தமிழ் எழுத்தில் ஏன் மிடற்றொலி மற்றும் பிறவொலி வேறுபாடுகள் இல்லையென்ற கேள்விக்கு ஒலிப்பியலாளர்கள் நடுவே ஒருமித்த கருத்து இல்லை. ஒரு சாரார் தமிழ் மொழியில் கூட்டுமெய்களும் மிடற்றின்று ஒலிக்கும் வல்லெழுத்துக்களோ அடிப்படையில் இருந்தது இல்லையென்றும், சொற்புணர்ச்சி மற்றும் குறுக்கத்தினால் மட்டுமே இவ்வொலிகள் ஏற்படுகின்றன என்றும் குறிப்பிடுகின்றனர். அதனால், இந்திய ஐரேப்பிய மொழிக் குடும்பத்தைச் சார்ந்த மொழிகள் மற்றும் பிற திராவிட மொழிகளைப் போலன்றி தமிழில் இவ்வொலிகளுக்கெனத் தனியெழுத்துக்கள் தேவைப்படவில்லை என்று கருதுகின்றனர். இக்கருத்திலிருந்து மாறுபட்டு மிடற்றொலிகள் எழுத்துக்குறிகள் இல்லையெனவும் ஒரு கருத்தை சிலர் முன் வைக்கின்றனர்.

தமிழ் மொழியின் சிறப்புகளைப் பற்றி தமிழறிஞர்கள் மட்டுமன்றி பலநாட்டு அறிஞர்களும் தங்களது கருத்துக்களை பதிவு செய்துள்ளனர்.

Francis Whyte Ellis என்ற பிரான்சு நாட்டு மதபோதகர், இந்தியாவின் பல பகுதிகளில் பணி புரிந்தவர். அதன்மூலம் இவர் தென்னிந்திய மொழிகள் பிற இந்திய மொழிகளில் இருந்து வேறு பட்டிருந்ததை உணர்ந்து "திராவிட மொழிக் குடும்பம்" என்னும் கருத்தாக்கத்தை வெளிப்படுத்தினார்.

Robert Carldwell என்ற ஐயர்லாந்து நாட்டு மதபோதகர், "திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்" எனும் நூலை ஆங்கிலத்தில் எழுதியுள்ளார். இவர் தமிழ்மொழி உலகின் முதல் மொழி என்றும் மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகியவை தமிழ் மற்றும் பிறமொழி கலப்பில் வந்தது என்றும் கூறியுள்ளார்.

"குமரி முனைக்குத் தென்பால் உள்ள பெருநாட்டில் முதன்முதல் தோன்றி வாழ்ந்த நன்மக்களே ஒரு காலத்தில் இந்திய நாடெங்கும் பரவிய தமிழர் ஆவர். தமிழரை வடமொழியாளர்கள் திராவிடர் என்று அழைத்தனர். குமரி கண்டத்தைக் கடல் கொண்டபொழுது இவருள் சில பகுதியினர் கடல் வழியாகவும், நில வழியாகவும் பெலுசிஸ்தான், மெசபடோமியா முதலிய வடமேற்கு ஆசிய நாடுகளில் சென்று வாழ்ந்தனர்" என்று அறிஞர் கால்டுவெல் கூறுகிறார்.

மிரோன் வின்சுலா எனும் அமெரிக்காவை சேர்ந்த மொழியறிஞர் "A Comprehensive Tamil and English Dictionary" எனும் 976 பக்கங்களும் 68,000 வார்த்தைகளையும் கொண்ட நூலை உருவாக்கினார். இதனை அடிப்படையாகக் கொண்டே 1924இல் சென்னை பல்கலைக்கழகம் தமிழ் பேரகராதியைத் தொகுத்து வெளியிட்டது.

இவ்வாறு தமிழ்மொழி பல்வேறு மக்களையும் அறிஞர்களையும் தன்பால் ஈர்த்துக் கொண்டிருக்கிறது. தற்பொழுது நிகழ்ந்துள்ள கீழடி அகழ்வாராய்ச்சியின்படி தமிழர் பண்பாடு 2600 ஆண்டுகள் பழமைவாய்ந்தது என அறியப்பட்டுள்ளது. இதனை அமெரிக்க நாட்டிலிருக்கும் பீட்டா பகுப்பாய்வு சோதனை ஆய்வகம் உறுதிப்படுத்தியுள்ளது. வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, கட்டுமானம் தொழில்நுட்பம் என அனைத்தும் அக்காலம் சிறப்புற்று விளங்கியுள்ளதை இது பறைசாற்றுகிறது. தமிழ் பிராமி எழுத்துக்கள் அப்பொழுதே உயிர்ப்புடன் இருந்தது சான்றுடன் நிரூபிக்கப்பட்டுள்ளது. சங்ககால மக்கள் எழுத்தறிவு பெற்றவர்கள் என்றும் அவர்கள் நாகரீகத்தில் சிறந்து விளங்கினர் என்றும் பல சான்றுகள் கிடைத்துள்ளன.

கீழடியில் இதுவரை கிடைத்தவற்றைக் கொண்டே தமிழ் சமயசார்பற்ற மொழி என்பதை உறுதிப்படுத்தமுடிகிறது. அதாவது தமிழ் சமயங்களும், இறை நம்பிக்கையும் தோன்றும் முன்பே தோன்றிய மொழி என்பதை உறுதிப்படுத்தியுள்ளது.

சங்ககாலத்தில் வரையறையே மாற்றியமைக்க வேண்டிய நிலையை கீழடி அகழாய்வு நமக்கு உருவாக்கியுள்ளது. கி.மு.3ஆம் நூற்றாண்டிலிருந்து கி.மு. 6 ஆம் நூற்றாண்டிற்கு அது பின்தள்ளப்பட்டுள்ளது. தமிழே உலகின் முதல் மொழி என்பதை ஐயமின்றி நிரூபிக்க இன்னும் பல அகழாய்வு முடிவுகள் தேவைப்படுகின்றன. அதை கீழடி, கொடுமணல் போன்ற இடங்களில் தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை மேற்கொண்டுள்ள அகழ்வாய்வுகள் ஆவணப்படுத்தும் நன்னாளுக்காகக் காத்திருப்போம்! ❖

# பிறந்த நாள் வாழ்த்து!

மேனாள் அரசவைக் கவிஞர், திரைப்பட பாடலாசிரியர், கலைமாமணி, கவிஞர் முத்துலிங்கம் அவர்களின் பிறந்தநாளில் அவர் புதியதாக குடிபுகுந்துள்ள இல்லத்திற்கு சென்று அனைத்திந்திய தமிழ்ச் சங்கத் தலைவர் மற்றும் அம்மா தமிழ்ப்பீடம் நிறுவனர் சொல்லின் செல்வர் ஆவடிக்குமார் அவரை வாழ்த்தி, வணங்கிய நிகழ்வின் போது அவரது மகள் மற்றும் மருமகன் இருக்கின்றனர்.





## வாழ்த்துப்பா... !




கழக முரசெனும் கற்றல் இதழை
அழகு தமிழில் அளித்தீர் பழகுவதில்
ஆவடி யார் சொற் குமாரன்
ஆன்றவிந்த அண்ணலார் பாடற வாழ்கென பாடு.

நற்றமிழை நாளும் நனி விரும்பும் ஆவடியார்
கற்றவரைப் போற்றும் கனிமொழியார் மற்றவர்தம்
அம்மாபீடம் அமைப்பாளர் ! வாழ்த்துவன் !
இம்மாபெரும் விழாவில் இன்று.

**புலவர் தி.வே. விஜயலட்சுமி,**
**சென்னை**

"கவிதை உறவு" ஆசிரியர், எழுத்தாளர், சிறந்த தமிழறிஞர், கலைமாமணி ஏர்வாடி எஸ். ராதாகிருஷ்ணன் அவர்களின் பிறந்தநாளில், அனைத்திந்திய தமிழ்ச் சங்கத் தலைவர் மற்றும் அம்மா தமிழ்ப்பீடம் நிறுவனர் சொல்லின் செல்வர் ஆவடிக்குமார் நேரில் வாழ்த்தி வணங்கிய நிகழ்வு.


(40)
2
Sathia Moorthi (You)
K Pandiarajan
Govindarajulu M
Avadikumar







(47)


# ‘முன்னேறும் தமிழ்நாடு’

# காணொளிக் கவிதை அரங்கேற்றம்










**அனைத்திந்திய தமிழ்ச்சங்கம் தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சி இயக்ககம் மற்றும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் ஆகியவற்றோடு இணைந்து ‘முன்னேறும் தமிழ்நாடு‘ என்ற தலைப்பில் கூகுள் மீட் செயலி வழியாக காணொளி கவிதை அரங்கேற்றம் எட்டு நாட்கள் 16 மணி நேரம் நேரலை நிகழ்வாக நடைபெற்றது.**

அரங்கத்தில் நடைபெறுவதாக இருந்த இந்தக் கவிதை அரங்கேற்றம், கொரோனா என்கின்ற தொற்று நோயின் அச்சுறுத்தலால், அரசு கடைபிடித்து வரும் ஊரடங்கு காரணமாக இணையவழியில் நேரலை கவிதை அரங்கேற்றமாக மாற்றியமைக்கப்பட்டது. "முன்னேறும் தமிழ்நாடு" கவிதை அரங்கேற்றத்திற்கு முன்னோட்டமாக இரண்டு நாட்கள் கவி பெருமக்களுக்கு இணைய வழிப் பங்கேற்பு பயிற்சி வழங்கப் பட்டது தொடர்ந்து ஆறு நாட்கள் ஆறு அமர்வுகளாக கவிதை அரங்கேற்றம் செய்யப் பட்டது.

கூகுள் மீட் என்ற செயலியில் நடைபெற்ற இக் கவிதை அரங்கேற்றம் தமிழ் மொழியில் நடைபெற்ற முதல் இணையக் கவிதை அரங்கேற்றம் என்ற சிறப்பைப் பெற்றது. இந்த நிகழ்வில், உலகின் பல பகுதிகளிலிருந்து 112 கவி பெருமக்கள் பங்கு கொண்டு தங்கள் கவிதைகளை அரங்கேற்றம் செய்து மகிழ்ந்தனர்.

அனைத்திந்திய தமிழ்ச் சங்கத் தலைவர் மற்றும் அம்மா தமிழ்ப்பீடம் நிறுவனர் "சொல்லின் செல்வர்" ஆவடிக்குமார் ஒருங்கிணைத்து, தலைமையேற்று நடத்திய இந்த கவிதை அரங்கேற்றத்தை தமிழ் வளர்ச்சி, தமிழர் பண்பாடு, தமிழ் ஆட்சி மொழி மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் மாஃப.க. பாண்டியராஜன் தொடங்கி வைத்து உரையாற்றினார்.

அமைச்சர் தனது உரையில், தமிழ்நாடு அரசு தமிழ் வளர்ச்சிக்காக எடுத்து வரும் தொடர் நடவடிக்கைகளைத் குறிப்பிட்டு, முதலமைச்சர் எடப்பாடி கே. பழனிசாமி தலைமையிலான அம்மாவின் அரசு உலகம் முழுவதிலும் உள்ள பல்கலைக்கழகங்களில் இருக்கை அமைப்பது தொடங்கி தமிழ் வளர் மையங்கள் அமைப்பது என சிறப்பாகப் பணியாற்றி வருகிறது. தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை கீழடியில் மேற்கொண்ட அகழ்வாய்வு முடிவுகள் நம்முடைய தொன்மை நாகரிகத்தை அறிய வைத்ததைப் போலவே, கீழடியில் நடைபெறும் அடுத்தக் கட்ட ஆய்வு முடிவுகளும், கொடு மணல் அகழ்வாய்வு முடிவும் கிடைக்கின்ற போது, உலகின் மூத்த மொழி தமிழ் என்பதை உலகத்துக்கு உணர்த்தும் ஆவணங்கள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறோம் என்று குறிப்பிட்டார்.

அமைச்சர் க. பாண்டியராஜன் தொடர்ந்து பேசுகையில், கொரோனா நோய்த்தொற்று உலகத்தை அச்சுறுத்திக் கொண்டிருக்கும் நிலையில் மனிதர்கள் ஒவ்வொருவரும் தங்களை தனிமைப்படுத்திக் கொண்டிருக்கும் நிலையிலும் அனைத்திந்திய தமிழ்ச் சங்கம் முன்னேறும் தமிழ்நாடு காணொளி கவிதை அரங்கேற்றம் நடத்துவது பாராட்டுக்குரியது தமிழ்நாடு அடைந்துவரும் முன்னேற்றத்தை கவிதை வடித்து கவிஞர்கள் அரங்கேற்றும் சிறப்பான இந்த நிகழ்ச்சியை ஏற்படுத்தித் தந்த அனைத்திந்திய தமிழ்ச் சங்கத்தை பாராட்டுகிறேன் முன்னேறும் தமிழ்நாடு என்ற தலைப்பில் கவிதை பாட வந்திருக்கின்ற கவிஞர்களை நான் வாழ்த்துகிறேன். தமிழ்நாடு அரசையும் அதன் முதலமைச்சர் எடப்பாடி கே. பழனிசாமி அவர்களையும் சிறப்பிக்கும் வகையில் உங்கள் கவிதைகள் சிறப்பாக அமைந்திருக்கின்றன, அதற்காக நன்றி தெரிவிக்கிறேன். உங்கள் கவிதைகள் அனைத்தையும் நூலாக வெளியிடப் போவதாக அனைத்திந்திய தமிழ்ச் சங்கத்தின் தலைவர், சொல்லின் செல்வர் ஆவடிக்குமார் தெரிவித்தார் அந்த முயற்சிக்கு நான் என்னால் முடிந்த உதவிகளை செய்து தருகிறேன். உங்கள் கவிதைகளை முழுமையாக இருந்து கேட்க வேண்டும் என்ற ஆசை இருந்தும் அலுவல்கள் காரணமாக விடைபெறுகிறேன். கண்டிப்பாக உங்கள் கவிதைகள் அனைத்தையும் படித்து என்னுடைய கருத்தை சொல்கிறேன் என்று தெரிவித்தார்.

முதல் அமர்வில் இருபது கவிஞர்கள் கவிதைகளை அரங்கேற்றம் செய்த பின்னர், நிறைவாக தமிழ் வளர்ச்சித் துறை இயக்குனரும், உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவன இயக்குநருமான முனைவர் கோ. விசயராகவன் வாழ்த்துரை வழங்கினார், அவர் தனது வாழ்த்துரையில், புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தமிழ் வளர்ச்சிக்காக, உருவாக்கிய திட்டங்களை பட்டியலிட்டுக் காட்டி, தமிழறிஞர்களை சிறப்பிக்கும் வகையில் தமிழ்நாடு அரசு விருதுகள் வழங்கி பெருமைப்படுத்துவதைக் குறிப்பிட்டு பேசிய இயக்குநர் அம்மா வகுத்து தந்த வழியில் முதலமைச்சர் எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் சிறப்பாக தமிழ் மொழி வளர்ச்சிக்கு அரும்பணியாற்றி வருவது கண்டு ஒவ்வொரு தமிழனும் பெருமை அடைகின்றனர் என்பதையும், எல்லோரும் பாராட்டத்தக்க வகையில் நம் தமிழ்நாடு முன்னேறி இருக்கிறது என்பதையும், தங்கள் கவிதைகளில் படம்பிடித்துக்காட்டிய உங்களையெல்லாம் பாராட்டி வாழ்த்துகிறேன் என்று குறிப்பிட்டார். அனைத்திந்திய தமிழ்ச் சங்க தமிழ்த்திறன் ஆய்வு நடுவ இயக்குநர் முனைவர் சி.முத்துமாலை நன்றி நவில முதல் அமர்வு இனிதே முடிந்தது.

முன்னேறும் தமிழ்நாடு காணொளி கவிதை அரங் கேற்றத்தின் இரண்டாவது அமர்வு அனைத்திந்திய தமிழ்ச் சங்கத்தின் துணைத் தலைவர் கவிமாமணி ரேவதி ராதாகிருஷ்ணன் வரவேற்புரையுடன் தொடங்கியது. இதில் பதினேழு கவிப்பெருமக்கள் தங்கள் கவிதைகளை அரங்கேற்றம் செய்தனர். நிறைவாக வாழ்த்துரை வழங்கிய, தமிழ் வளர்ச்சித் துறையின் மேனாள் இயக்குநர் மற்றும் உலகத் தமிழ்ச்சங்க மேனாள் இயக்குநர் முனைவர் கா மு சேகர், தமிழ் மொழி எப்படி சிதைக்கப்படுகிறது என்பதையும், மொழிச் சிதைவு ஏற்படாமல் பாதுகாக்க வேண்டியது கவிஞர்கள் கடமை என்பதையும் உணர வேண்டும் உதாரணத்திற்கு கன்னியாகுமரியில் "இருக்கின்றது" என்று ஆரம்பிக்கும் ஒற்றைச்சொல் ஒவ்வொரு மாவட்டத்திலும் சுருங்கிச் சுருங்கி, இறுதியில் சென்னைக்கு வருகின்றபோது "கீது" என்று சொல்லப்படுவதை சுவைபட எடுத்து குறிப்பிட்டார். இன்று நாம் எழுதும் எழுத்துக்கள் நாளைய தலைமுறைக்கு மொழிப்பாடம் எனவே, நல்ல தமிழ்ச் சொற்களை தேடிப்பிடித்து கவிதை களை எழுதுங்கள் என்ற புதிய சிந்தனையை வாழ்த்துரையாக வழங்கினார்.

இறுதியில் அனைத்திந்திய தமிழ்ச்சங்க பிரச்சார செயலாளர் நல்லாசிரியர் ரத்னா ச.ம. மாசிலாமணி நன்றி நவில, இரண்டாம் அமர்வு இனிதே முடிந்தது.

முன்னேறும் தமிழ்நாடு மூன்றாம் அமர்வு தொடக்கத்தில், அனைத்திந்திய தமிழ்ச் சங்கப் பிரச்சாரச் செயலாளர் நெல்லை க. சோமசுந்தரி வரவேற்புரை வழங்கினார். இந்த அமர்வில் 20 கவி பெருமக்கள் தங்கள் கவிதைகளை அரங்கேற்றம் செய்தனர். இறுதியாக தமிழ்நாடு அரசின் உ. வே. சா. விருது பெற்ற எழுத்தாளர், கவிஞர், நமது அம்மா நாளிதழ் ஆசிரியர், தமிழறிஞர் மருது அழகுராஜ் வாழ்த்துரை வழங்கினார். அவர்

தனது வாழ்த்துரையில், புரட்சித்தலைவி அம்மா அவர்களின் தமிழ்ப்பணிகளை பட்டியலிட்டுச் சொல்லியதோடு, அம்மா தொடங்கியப் பணிகளை சிறப்பாக நிறைவேற்றி சாதனைப் படைத்து வரும் முதலமைச்சர் எடப்பாடி கே. பழனிசாமி தலைமை யிலான அம்மா அரசுக்கு தமிழறிஞர்களும், கவிஞர்களும் பக்க பலமாக இருப்பார்கள் என்று பெருமிதத்தோடு சுட்டிக்காட்டினார். தமிழை வைத்து தங்களை வளர்த்துக் கொண்டவர்கள் ஆண்ட போது தமிழுக்கு என்ன செய்தார்கள் என்று எண்ணிப் பார்த்தால், ஏதுவுமே செய்யவில்லை. என்றார். முடிவில் அனைத்திந்திய தமிழ்ச்சங்க துணைத்தலைவர் கோவை விஜி மோகன் என்கிற சீ. விஜியலட்சுமி நன்றி கூறினார்.

நான்காம் அமர்வு அனைத்திந்திய தமிழ்ச்சங்க கர்நாடக மாநில அமைப்பாளர் கவிமாமணி தேன்மொழி வரவேற்புரையுடன் தொடங்கியது, இந்த அமர்வில் 18 கவி பெருமக்கள் தங்கள் கவிதைகளை அரங்கேற்றம் செய்த பின்னர் நிறைவாக தமிழ்நாடு அரசின் கம்பர் விருது பெற்ற தமிழறிஞர் பொதிகை தொலைக்காட்சி நிறுவனத்தின் முன்னாள் இயக்குநர் கலைமாமணி முனைவர் பால ரமணி வாழ்த்துரை வழங்கினார். அவர் தனது உரையில் கவிதை அரங்கேற்றம் செய்த கவி பெருமக்களின் கவிதை நயத்தையும் கருத்துச் செறிவை சிறப்பிக்கும் கருத்துக்களை விளக்கி உரையாற்றினார். அதனைத் தொடர்ந்து விமர்சன உரையாற்றிய தமிழ் வளர்ச்சித் துறை மேனாள் இயக்குநர் முனைவர் கா.மு. சேகர் தன் உரையில் கம்பராமாயணத்தில் பகவாண் அனுமனுக்கு சொல்லின் செல்வர் என்னும் பெயர் உண்டு என்பதைக் குறிப்பிட்டு தமிழ்நாடு அரசின் கம்பர் விருது பெற்ற முனைவர் பால ரமணியும், தமிழ்நாடு அரசின் சொல்லின் செல்வர் விருது பெற்ற ஆவடியாரும் இணைந்திருப்பது சிறப்பு என்றார். முடிவில் அனைத்திந்திய தமிழ்ச்சங்கச் செயலாளர் வழக்கறிஞர் ஆ.கு.நிறைமதி நன்றி கூறினார்.

ஐந்தாம் அமர்வின் தொடக்கத்தில், அனைத் திந்திய தமிழ்ச் சங்க, செங்கற்பட்டு மாவட்ட அமைப்பாளர் கவிமாமணி சிற்றுளி ராம் கணேஷ் வரவேற்புரையாற்றிய இந்த அமர்வில் 18 கவி பெருமக்கள் தங்கள் கவிதைகளை அரங்கேற்றம் செய்தனர். தமிழ்நாடு அரசின் பாரதிதாசன் விருது பெற்ற தமிழறிஞர், கவிதை உறவு இலக்கிய இதழின் ஆசிரியர் கலைமாமணி ஏர்வாடி எஸ். ராதாகிருஷ்ணன் வாழ்த்துரை வழங்கினார்.

அவர் தனது உரையில் எல்லோரையும் இணைய வழியில் சந்திக்கும் இந்தக் கவியரங்க நிகழ்வு மனதுக்கு மகிழ்ச்சியைத் தருவதாகக் குறிப்பிட்டதோடு, தமக்கும் சொல்லின் செல்வர் ஆவடிக்குமார் ஐயாவுக்கும் இருக்கும் நட்பின் சிறப்பை எடுத் துரைத்து, அனைவரையும் அரவணைத்துச் செல்லும் ஆளுமையும், அளப்பரிய அன்பும் கொண்ட ஆவடிக் குமார் அய்யாவின் மாண்பை பாராட்டியதோடு 40 ஆண்டுகளாக அவர் தமிழ் மீது கொண்டுள்ள தணியாத தமிழ்ப் பற்றை எடுத்துரைத்தார்.

மேலும் அவர் பேசும்போது, கவிதை என்பது நம்மை உயிர்ப்பிக்கும் ஜீவன் அது திட்டமிட்டு வருவதில்லை. இயல்பாய் மனதில் திடீரென்று மின்னலைப் போன்று ஊற்றெடுத்து வரவேண்டும் என்று குறிப்பிட்டதோடு, தமிழகத்தில் பாதி பேர் கவிஞர்களாக இருக்கிறார்கள். ஆனால், அதில் பாதி பேர் கவிஞர்களாக எழுதுகிறார்களா என்பதில் ஐயம் இருக்கிறது என்றவர், எல்லா மொழியிலும் கவிதை இருக்கிறது. ஆனால் ஒரு மொழியே கவிதையாக இருப்பது தமிழ் மட்டும்தான் என்று மகுடம் சூட்டியவர், சங்கப்பாடல்களில் அரசனை விட கவிதை இயற்றும் புலவர்களுக்கு மிகுந்த மரியாதை இருந்தது என்பதை சுட்டிக் காட்டி. சங்க காலத்தைப் போல் கவிஞர்களுக்கு மரியாதை கிடைக்கும் வகையில் சொல்லின் செல்வர் இந்தக் கவிதை அரங்கேற்றத்தை ஏற்பாடு செய்து நடத்திக்கொண்டிருக்கிறார், சங்க காலம் மீண்டும் தோன்றியிருக்கிறது என்று சொல்லி இந்தக் கவியரங்கு நிகழ்வில் கலந்து கொண்டது கவிதை வானில் சிறகடித்து பறந்தது போல மனம் மகிழ்வாக இருக்கிறது என்று கூறி தன் உரையை நிறைவு செய்தார். முடிவில் அனைத்திந்திய தமிழ்ச்சங்க கள்ளக்குறிச்சி மாவட்ட அமைப்பாளர் கவிமாமணி கு. வளர்மதி செல்வி நன்றி கூறினார்.

முன்னேறும் தமிழ்நாடு காணொளி கவிதை அரங்கேற்றத்தின் ஆறாவது அமர்வு அனைத்திந்திய தமிழ்ச்சங்க, சென்னை மாநகரத் தலைவர் தாமரைப்பூவண்ணன் வரவேற்புரையோடு தொடங்கியது, இதில் 19 கவிப்பெருமக்கள் தங்கள் கவிதைகளை அரங்கேற்றம் செய்தனர்.

வாழ்த்துரை வழங்கிய திரைப்பட இயக்குநர், பாடலாசிரியர், கவிஞர், எழுத்தாளர், ராசி அழகப்பன் தன்னுடைய உரையில், படைப்பதனால் கவிஞனே மொழியின் முதல்வன், கன்னித்தமிழ் புதல்வன் என்ற தன் கவிதையோடு தொடங்கி, கவி அரங்கேற்றம் செய்த கவி பெருமக்களின் கவிதைகளை நயம்பட புகழ்ந்துரைத்தார். இறுதியாக அனைத்திந்திய தமிழ்ச் சங்கத்தின் துணைத் தலைவர் வேட்டவலம் எஸ். எஸ். இஸ்மாயில் நன்றி கூறினார்

அனைத்திந்திய தமிழ்ச் சங்கம் நடத்திய முதல் காணொளி கவியரங்கம் கவிஞர்களின் மனதில் தன்னம்பிக்கையும் ஊக்கத்தையும் தந்தது என்பதோடு, ஊரடங்கு காலத்திலும் உணர்வுகள் ஒருங்கிணைய தடையில்லை என்பதை நிரூபித்தது என்றால் மிகையேது.

**செய்தி மற்றும் படங்கள்:**

**நெல்லை க.சோமசுந்தரி, முனைவர்.சி.முத்துமாலை, முனைவர் மு.கோவிந்தராசன், முனைவர் வே.ஸ்ரீலதா, கோவை விஜிமோகன், வழக்கறிஞர் ஆ.கு.நிறைமதி,**

# கலைமாமணி கவிஞர் கு.மா. பா.

## நூற்றாண்டு நிறைவையொட்டிய சிறப்புக் கட்டுரை



**கு.** கு.மா.பா’ என்று திரையிசை ரசிகர்களால் அழைக்கப்பட்டவர். திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி அருகேயுள்ள வேளுக்குடியில் குறிச்சி மாரிமுத்து, கோவிந்தம் மாள் இணையருக்கு ஒரே மகனாகப் 1920 இல் மே மாதம் 13 ஆம் நாள் பிறந்தார்.

நான்கு வயதில் தந்தையை இழந்தார். இவரது தாயார் தேவாரம், திருவாசகம், பக்திப் பனுவல்களை இசைக்கக்கூடியவராக இருந்தார். தாயைப் போல பிள்ளை என்பதற்கு ஏற்ப தாய் பாடிய பாடல்கள் தான் தனது தமிழார் வத்தையும், இசைவேட்கையையும் தூண்டியதாக கு.மா.பா பேட்டிகளில் குறிப்பிட்டுள்ளார்.

வறுமையின் காரணமாக இவரது தாயாரால் ஆறாம் வகுப்புக்குமேல் படிக்க வைக்க இயலவில்லை. இதன்பிறகு வேளாண் தொழிலாளராகவும், மளிகைக் கடையில் பொட்டலம் மடிக்கும் வேலை, துணிக்கடை போன்றவற்றில் வேலை செய்தார். பொட்டலம் மடிக்கும் வேலையின்போது ஓய்வு நேரத்தில் பழைய புத்தகங்களைப் படித்துவந்தார். இதனால் எழுத்தின் மீது ஆர்வம் ஏற்பட்டு சிறுகதைகளை எழுதத் துவங்கினார்.

இவரின் சொந்த ஊரைச் சேர்ந்த இளமைக்கால நண்பர்கள். எழுத்தாளர்கள் கா.மு.ஷெரீப், மேதாவி என்னும் கோ.த. சண்முகசுந்தரம் ஆகியோர்கள் ஆவார்

இவருக்கு இரு மனைவியர்கள். முதல் மனைவி மரகதவல்லி. மரகத வல்லி அவர்கள் இள வயதிலேயே நோய்வாய்ப்பட்டு இறந்து விட்டார். .



மறுமணம் செய்யாமல் துன்ப நினைவுகளிலே நடமாடி வந்தார் . சில ஆண்டுகளுக்குப் பின் இவர் ஜெயலட்சமி அவர்களை 1947 ல் திருமணம் செய்துகொண்டார் ஐந்து ஆண் மக்களையும், இரண்டு பெண் மக்களையும் பெற்றார்.

சி. பா. ஆதித்தனார் மதுரையில் இருந்து வெளியிட்ட தமிழன் இதழின் துணை ஆசிரியராக இணைந்தார். பின்னர் கோவையில் திருமகள் இதழில் பணியாற்றினார். 1945 இல் கொழும்பில் இருந்து வெளிவந்த வீரகேசரி நாளிதழில் துணை ஆசிரியராக இணைந்தார். இந்திய விடுதலைக்குப் பிறகு நாடு திரும்பியவர் தமிழன் குரல் என்ற மாதமிரு முறை இதழை நடத்தி இழப்பை சந்தித்ததால் அதனை விற்றுவிட்டு, சென்னை வந்து ம.பொ.சியின் "தமிழ் முரசு' இதழில் துணை ஆசிரியராக இணைந்தார். அக்காலக்கட்டத்தில் சிந்தாதிரிப்பேட்டையில் தமிழாசிரியராக இருந்த திருவேங்கடம் என்பவர் இவரின் எழுத்தாற்றலைக் கண்டு இவருக்கு மரபுக் கவிதைகளை எழுதக் கற்றுக்கொடுத்தார். இதன் பிறகு 1949 ஆம் ஆண்டில் பாரதிதாசன் தலைமையில் கோவையில் நடந்த கவியரங்கில் தன் 28 ஆம் வயதில் கலந்துகொண்டார்.

முதற்குரல், தணிகைவேல் சதகம், உளிக்குப் பதிலளிக்க!

(கவிதைத் தொகுதிகள்)

இன்பத் துளிகள் சூடியவர்கள் அதிர்ஷ்ட குழந்தை, பச்சை மாலை (கதை நூல்கள்.), சிலப்பதிகாரம், சகுந்தலை, வள்ளித்திருமணம், உஷா கல்யாணம் (இவை நாட்டிய நாடகங்கள்) கொஞ்சும் சலங்கை, மகாகவி காளிதாஸ், மடாதிபதியின் மகள் (திரைப்பட வசனம்) போன்ற பல்வேறு துறைகளில் தமிழுக்குப் பல படைப்புகளைத் தந்த கொடை வள்ளல்.

சிலம்புச்செல்வர் ம.பொ.சி.யின் தமிழரசுக் கழகத்தில் இணைந்து பணியாற்றினார்.

அக்கழகத்தின் பொதுச் செயலாளராகவும் கடமையாற்றி யுள்ளார். 1974 முதல் 1980 வரை தமிழக சட்டசபை மேலவை உறுப்பினராகவும் (MLC ) இருந்துள்ளார்.

1975 இல் தமிழக அரசின் கலைமாமணி விருது பெற்றார். கலைஞர் அவர்களால் பாரதிதாசன் விருது அளிக்கப்பட்டுச் சிறப்பிக்கப்பட்டார் .

தமிழ்க் கவிஞர் மன்றம் வழங்கிய கவிக்குயில் பட்டம். இவருக்கு சிறப்பு விருதாகும். வீரபாண்டிய கட்டபொம்மன் படப்பாடல்களுக்காக கெய்ரோவில் நடைபெற்ற உலகத் திரைப்பட விழாவில் சிறந்த பாடலாசிரியராகத் தேர்வு செய்யப்பட்டு வழங்கிய விருது பெற்றார்.

கவிஞராக மட்டுமல்ல, கதை, வசனங்களிலும் அசாத்திய சாதனை படைத்தவர் கு.மா. பா. ஏவி.எம் நிறுவனத்தில் கதை இலாகாவில் மாத ஊதியத்தில் இணைந்தார் .அவர்களின் ஓர் இரவு (1951 ) படத்தின் இயக்குநர் ப.நீலகண்டன் அவர்களின் உடன் உதவி இயக்குநராக ஆக்கப்பட்டார். அப்படத்தின் முதல் வேலையாக இவருக்கு அண்ணாதுரை எழுதிய வசனங்களைப் படி எடுத்தல் ஆகும், படியெடுக்கும்போது தன்னார்வத்துடன் ஒரு காட்சிக்குக் கவிஞர் ஒரு பாடலை எழுதினார்.

அந்தப் பாடல் படக் குழுவிற்கு பிடித்து விட்டதால் அந்த பாடல் பதிவு பெற்று , அதே படத்தின் மேலும் இரண்டு பாடல்கள் எழுத வாய்ப்பு கிடைத்தது. அதன் பிறகு பல படங்களுக்குப் பாடல்களை எழுதினார். 1951ல் வெளியான 'ஓர் இரவு' திரைப்படத்தில் முதல் பாடல் எழுதிய



அவரது கவிதை மனம், அவர் காலத்தின் மிகச் சிறந்த பாடல் ஆசிரியர்கள் இயங்கிக் கொண்டிருந்த அதே வேளையில் தொடுத்துச் சென்றிருக்கும் வெற்றிப் பாடல்களின் எண்ணிக்கை அடங்காப் பட்டியல்.

1953 இல் வெளியான பொன்னி மற்றும் 1962 இல் வெளி யான மடாதிபதி மகள் போன்ற திரைப் படங் களுக்கு வசனம் மற்றும் பாடல்கள் எழுதினார் 'வேலைக் காரன்' படத்தின் கதை, பாடல்கள் எழுதினார். ஏவி.எம். இந்தியில் மறு ஆக்கம் செய்த திரைப்படங்களின் இயக்குநர் எம்.வி.ராமனின் ஆலோசனையை ஏற்றக் கவிஞர், பம்பாய் பிலிம்ஸ்தான் ஸ்டுடியோவின் கதை இலாகாவில் பணியாற்றியதுடன் 'சாம்ராட்', 'நாஸ்திக்' ஆகிய திரைப்படங்களுக்கு வசனம், பாடல்கள் எழுதி, தமிழில் மொழிமாற்றம் செய்யும் கலையைக் கற்றறிந்தார்.

'கோமதியின் காதலன்' ( 1955)

திரைப்படத்தில், இயக்குநர் ப.நீலகண்டனின் உதவி இயக்குநராகப் பணியாற்றியதுடன் பெரும் பாலான பாடல்களையும் எழுதினார்.

யாரடி நீ மோகினி (உத்தம புத்திரன்1958 )

எனக் கு.மா.பாவின் வரிகளில் டி. எம். எஸ். பாடியதைக் கேட்டுப் பரவசமுற்று, அந்தப் படத்தின் உத்தம புத்திரன்(1958) திரைக்கதை வசனகர்த்தா வாகிய ஸ்ரீதர், ஆமாம் கல்யாணப்பரிசு, காதலிக்க நேர மில்லை படங்களை இயக்கிய ஸ்ரீதரேதான்

கவிஞருக்குத் தன் அன்பளிப்பாக ஆயிரம் ரூபாய் கொடுத்து மகிழ்ந்தாராம். இந்த பாடல் மற்றும் படகாட்சிக்காக 50 முறைகளுக்கு மேல் படத்தை பார்த்தார் நடிகர் பிரபு அவர்கள் என்று சொல் வார்கள்.

தமிழ்த் திரையுலக வரலாற்றில் ஒரு முக்கிய தடம் பதித்த 'கொஞ்சும் சலங்கை' ( 1962 ) படத்தின் திரைக்கதை, வசனம், பாடல்கள் எல்லாம் கு.மா. பா.தான் இதில் எஸ்.ஜானகி பாடிய 'சிங்கார வேலனே தேவா..' அவருக்கு மட்டுமல்ல, பாடலை இயற்றிய கவிஞருக்கும் பெரும்புகழை ஈட்டித்தந்தது. இசைத்தட்டுகள் விற்பனையில் அந்தக் காலத்தில் முதலிடத்தைப் பிடித்த இந்தப் பாடலுக்கு என்றென்றும் தொடரும் ரசிக பட்டாளம் உண்டு. ஆருயிர் என்று அழைத்தவளே என்று பி. சுசீலா ஆரம்பிக்க டி. எம் .எஸ். சேர்ந்து " நெஞ்சினிலே நினைவு முகம் தொடர கே. ஜமுனாராணியும் சேரும் திரிவேணி சங்கமம் இசைக்கூடல் ( சித்ராங்கி 1964 ) காலத்தால் அழிக்கப்படாத அற்புதப் பாடல் .இந்த பாடல் எழுதத் தூண்டுகோலாக இருந்தது கவிஞரின் நெஞ்சம் விட்டு நீங்காது மறைந்தும் மறையாத நினைவில் வாழ்ந்த முதல் மனைவி மரகதம் அவர்கள் ஆகும்.

இவர் திரைக்கதை, வசனம், பாடல்கள் எழுதி வெற்றியடைந்த இன்னொரு படம் 'மகாகவி காளிதாஸ்' (1966).

மரபிலக்கணம் வழுவாத வெண்பா, விருத்தப்பா, கட்டளை கலித்துறை பாடல்களை இயற்றியதன் மூலம் வடமொழிக் கவிஞரான காளிதாசனை அசல் தமிழ்க் கவியாகவே காட்சிப் படுத்திய படம் அது. திரையிசைத் திலகம் கே.வி.மகாதேவன் இசையமைப்பில்

'மலரும் வான் நிலவும் சிந்தும் அழகெல்லாம் உன் எழில் வண்ணமே..' உள்ளிட்ட அத்தனைப் பாடல்களின் வரிகளும் அற்புதமானவை. 1980ல் வெளிவந்த 'தூரத்து இடிமுழக்கம்' படத்தில் சலீல் சவுத்ரி இசையில் அனைத்துப் பாடல்களையும் எழுதிய கவிஞர், அடுத்து, கங்கை அமரன் இசையில் 'கனவுகள் கற்பனைகள்' திரைப்படத்தில் எஸ்.பி. பாலசுப்பிரமணியம் பாடிய, பாடல் " வெள்ளம் போலத் துள்ளும் உள்ளம் "

பாவேந்தர் பாரதிதாசன் மீது தீவிர அபிமானம் கொண்டிருந்தகு மா. பா. அவர்கள். தம் 74 ஆம் அகவையில் 1994 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஏழாம் நாள் மண்ணுலகைவிட்டு மறைந்தார் .

திரைப்படப் பாடல்கள் தொகுப்பு கு. மா. பா. அவர்களின்திரையிசைப் பாடல்களைக் கவிஞர் பொன் செல்லமுத்து அவர்கள் தொகுத்துள்ளார் .

முதற் பதிப்பு 2013 ஆம் ஆண்டிலும் 2016 ஆம் ஆண்டில் இரண்டாம் பதிப்பும் சென்னை மணி வாசகர் பதிப்பகம் வெளி யிட்டது.

குறிப்பிடத்தக்க சில படங்கள் ஆண்டு பாடல்கள் :

கணவனே கண்கண்ட தெய்வம் 1955 - எந்தன் உள்ளம் துள்ளிவிளையாடுவதும் ஏனோ?

தங்கமலை ரகசியம் 1957 - அமுதைப் பொழியும் நிலவே


அம்பிகாபதி 1957 - மாசிலா நிலவே நம் காதலை,

அன்னையின் ஆணை 1958 - கவின் மாயா லோகத்திலே நாம் கலந்தே

சபாஷ் மீனா 1958 - சித்திரம் பேசுதடிகாணா இன்பம் கனிந்ததேனோ?

மரகதம் 1959- அன்பே என் ஆராவமுதே வாராய் குங்குமப்பூவே கொஞ்சும் புறாவே (மரகதம் படத்தில் இடம்பெற்று நடிகர் சந்திரபாபுவின் புகழை உச்சத்திற்கு கொண்டு சென்ற பாடல்

வீரபாண்டிய கட்ட பொம்மன் 1959) -



திரைப் படத்தில் இடம்பெற்ற அனைத்துப் பாடல்களையும் கு. மா. பா. ஒருவரே இயற்றினார் குழந்தைகள் கண்ட குடியரசு 1960) - இந்த படத்திலும் அனைத்துப் பாடல்களையும் கவிஞரே எழுதினார்.

சிரிக்கத் தெரியுமா பாடல் சிறப்பு பெற்றது .

கட்டுரை நிறைவு செய்வதற்கு முன்பாக கு. மா. பா. அவர்களுக்கு முன்னோடியாக இருந்து சிறப்பித்த கவிஞர் கு.சா.கிருஷ்ண மூர்த்தி அவர்களுடன் ஒப்பு நோக்கிப்பார்க்கலாம் .

காலம் தந்த கவிஞர் களுக்குள் எத்தனை ஒற்றுமை

கவிஞர்கள் கு. சா. கி - கு மா பா

கவிஞர் கு. மா. பா. அவர் களின் நூற்றாண்டு (13.05.2020 ) நிறைவினைப் போற்றி மகிழும் நேரத்தில் கவிஞர் கு. சா. கி. அவர்களை மறக்க முடியுமா?

கு. மா. பா. விற்கும் முன்னோடியான கு. சா. கி. என்கிற கு. சா. கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கு 19.05.2020 நூற்றியாறு (106 ) ஆண்டுகள் நிறை வடைந்தது கு. சா. கி., கு. மா. பா. இருவர் பெயர் களும் கு என்ற எழுத்தை முதல் எழுத்தாகக் கொண்டன. தமிழுலகத்தால் அன்புடன் கு. சா. கி. கு. மா. பா. என்று அழைக்கப்பட்டனர் .

இருவரும் கவிஞர்கள்

2. இருவரும் தமிழுணர்வுப் பற்றாளர்கள் .

3. இருவரும்இளவயதில்பலபோராட்டங்களைச் சந்தித்துத் தம்மை நிலை நிறுத்திக் கொண்டு மக்கள் மனதில் தனியிடம் பிடித்தவர்கள்.

4. இருவரும் முத்தமிழ் வல்லவர்கள்.

5. இருவரும் திரைப்படத்துறையில் தனி முத்திரை பதித்தவர்கள்

6. இருவர் பிறந்தும் மே மாதம் ஆகும் .

7. இருவரும் தமிழக அரசின் கலை மாமணி விருது பெற்றவர்கள் .

8. இருவரும் சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்களின் தமிழரசு கழகத்தில் உறுப்பினராக இருந்தவர்கள் .

9. இருவரும் தமிழெல்லைப் போராட்டங் களில் பங்கேற்றுப் பாடுபட்டவர்கள்.

10. கு. மா. பா. அவர்கள் பிறந்த தினம் 13 மே மாதம். குசா. கி. அவர்கள் மறைந்த தினம் 13 மே மாதம்.

11. இருவரின் பள்ளிப் படிப்பும் ஆரம்பநிலை யிலே நின்று விட்டது .

குசா.கி மூன்றாம் வகுப்பு . கு.மா.பா ஆறாம் வகுப்பு. இருபதாம் நூற்றாண்டு சார்ந்த மரபுக் கவிஞர்களுள் குறிப்பிடத்தக்க முன்னோடிகள்

கு. மா. பா. அவர்களின் நூற்றாண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாட முடியாத சூழலில் நாடு உள்ளது. ❖

# ஆவடியாரின் பார்வையில்

# பெரியார்

**ஆர்ப்பாட்டமும் ஆரவாரமும் ஆக்ரமித்துக் கொண்டிருக்கும் அதிசய உலகில் எனக்கு மௌனம் மட்டுமே மன சாந்தியை மகிழ்ச்சியைத் தருவது உண்டு. வசந்தத்தை வாரி வழங்கும் என் மௌனக் காலங்களில் என் இதயவானில் கருத்து மின்னல்கள் குதிப்பதுண்டு. அந்தக் கருத்து மின்னல்களுக்குக் கவிதைப் பின்னல் போட்டு ரசிப்பதுண்டு . கருத்துக்களைக் கவிதையாக்கி காப்பதன் நோக்கம்...**

...கவிஞன் என்னும் அங்கீகாரத்தைப் பெறுவதல்ல! என் பிறப்பின் தடங்கள் இப்பூமியில் பதியவேண்டும் என்ற வேட்கையே! என்றும், இதனால் தனது கவிதைகளில் கவிதை நயம் இருக்கிறது என்பதை விட கருத்து வளம் இருக்கிறது என்றால் என் கவிதைத் தேர் சரியான பாதையில் செல்கிறது என்று சொல்லின் செல்வர் ஆவடிக்குமார் தனது நெஞ்சக் கதிர்கள் நூலில் வாக்குமூலம் தந்துள்ளார். இந்தத் தன்மானமிக்க "சொல்லின் செல்வரின்" பெரியார் பற்றி இந்நூலில் கூறியுள்ள கருத்துக்களைக் இங்கு காண்போம்.

"சீர்திருத்த சிங்கமென சீறியெழுந்திந்தப் பார் திருத்த பாடுபட்ட போர்வீரர் பார்வையினால் சூழ்ந்திருந்த தீமைகளை சாய்ந்திங்கிமயம் போல் வாழ்ந்திருந்த எம் பெரியார் "வாழி" என்று பெரியாரை சொல்லின் செல்வர் ஆவடியார் வாழ்த்துகிறார்.

**பகுத்தறிவுச் சிந்தனை :**

பகுத்தறிவு இயக்கத்தைத் தோற்றுவித்தவர் தந்தை பெரியார். அவர் "பகுத்தறிவுப் பகலவன்" என்று அழைக்கப்பட்டார். பெரியாரின் மேல் ஆவடியார் மிகுந்த ஈடுபாடு கொண்டுள்ளார்.

**"பண்பை மறந்து பாதை தவறி**
**மண்ணுக்கு சுமையாய் வாழ்ந்த மக்களிடம்**
**பகுத்தறிவு சங்கெடுத்து முழங்கி புதுமை**
**புகுந்திட்ட புத்துலகச் சிற்பியே! புவனம்**
**வணங்கும் புகழ்மிகு தந்தையே!"**

என்று குறிப்பிட்டுள்ளார். 1967களில் சர்.பிட்டி தியாகராயர் தலைமையில் தொடங்கப்பட்ட தென்னிந்திய நல உரிமைச் சங்கம் 1920ல் நீதிக் கட்சியாக மாறியது. தந்தை பெரியார் 1925ல் தொடங்கிய சுய மரியாதை இயக்கமும், நீதிக் கட்சியும் இணைக்கப்பட்டு 1944ல் திராவிடர் கழகம் என்ற திராவிட இயக்கமாக மாற்றப்பட்டது.

உவமைக் கவிஞர் சுரதா "நம்பிக்கையும் மன உறுதியும் தனக்கு ஏற்பட்டதற்குக் காரணம் பெரியாரின் கொள்கைகளே" எனக் கூறியுள்ளார். ஆவடியாரும் சுரதாவின் கொள்கைகளை ஒத்தவராக தன் பாதையில் அவர் பயணத்தைத் தொடர்ந்து கொண்டிருக்கிறார். பெரியாருக்கு காந்தியின் கொள்கைகளில் ஒரு வலுவான நம்பிக்கை இருந்தது. சத்தியாகிரக போராட்டத்தில் பங்கேற்று கைதானார். அவரது துணைவியாரும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்கள். தொடர்ந்து போராடி வெற்றி பெற்றார்.

**கல்வியின் அவசியம் :**

நாட்டின் வளர்ச்சிக்கும் சமுதாய மேம்பாட்டிற் கும் கல்வி அறிவு அவசியம். கல்வி உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்ற ஏற்றத்தாழ்வு இன்றி அனைத்துத் தரப்பினருக்கும் கிடைக்கச் செய்வதே திராவிட இயக்கக் கொள்கையாகும். தொண்டு செய்வதை வலியுறுத்தி சிறந்த தொண்டாகக் கல்வித் தொண்டைக் குறிப்பிடுகிறார் வள்ளுவர். சொல்லின் செல்வரும் கல்லாதவரை "மாக்கள்" என்று குறிப்பிடு கிறார்.

**"சுவர்க்கம் என்றும் நரகமென்றும் சொல்லி**
**மக்களை மாக்களாய் மாற்றிய கயவராம்**

கோவை சீ.விஜயலட்சுமி





**குக்களின் கூட்டத்தை கூண்டோடு அழித்து**
**மண்மூடிக் கிடந்த மனிதச் சிந்தனையின்**
**கண்ணைத் திறந்து காத்த தலைவனே!"**

என்று, கல்விக்கு பெரியார் கொடுத்த முக்கியத் துவத்தைக் குறிப்பிடுகிறார். திராவிட இயக்கங்கள் இந்தி, வடமொழி ஆகியவற்றை எதிர்ப்பதும், தமிழ் ஆங்கிலம் என்ற இருமொழிக் கொள்கை யினை ஏற்பதுமாகிய நிலைப்பாட்டை உடையவை. சமூகநீதி, இட ஒதுக்கீடு பெண்ணுரிமை, தமிழ் மொழி, தமிழ் இனம், தமிழ்நாடு ஆகியவற்றின் மேம்பாடு என்ற கொள்கையை அடிப்படையாகக் கொண்டு இயங்குகிறது. "தென்னிந்தியாவின் சாக்ரடீஸ் "பகுத்தறிவுச் சிற்பி" என பெரியார் அழைக்கப்படுகிறார்.

இந்தி கட்டாயமொழியாகப் பள்ளிகளில் அறிமுகப்படுத்தப்பட்ட காலத்தில் அதை எதிர்த்து போராடிய பலர் சிறையில் அடைக்கப்பட்டனர். இந்தியை ஏற்றுக் கொள் வதால் தமிழர்கள் அடிமைப் படுவார்கள் என்ற காரணத்தால் முற்றிலும் எதிர்க்கப்பட்டது. இன்றும் இப்போராட்டம் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

**சமுதாயம் :**

**"எங்கள்**
**சுவாசக் குழல்கள்**
**சுதந்திரக் காற்றை**
**சுவாசிக்காமல் . . .**
**சுற்றிக் கிடந்த**
**அழுக்குக் காற்றை**
**அருந்திக் களித்தபோது**
**கழுகுக் கூட்டம் வித்தைகள்**
**காட்டியது"** என்று சொல்லும் ஆவடியார்.

கள்ளுக்கடைகளை மூட வலியுறுத்தி போராட்டத்தில் ஈடுபட்ட பெரியார் தன்னுடைய தோட்டத்திலிருந்த 500 தென்னை மரங்களை வெட்டிச் சாய்த்தார். இப்போராட்டத்தில் சிறைக் கும் சென்றார். சாதியை எதுவெல்லாம் காப்பாற்றியதோ அதையெல்லாம் எதிர்த்துப் பிரச்சாரம் செய்த பெரியார் வழி வந்தவர் என்பதைக் காட்டுகிறார்.


**சமுதாய மாற்றம் :**

"தமிழக வரலாற்றில் ஒரு சகாப்தம் பெரியார்". தமது புதிய சிந்தனையாலும், பார்வையாலும், தெளிவாலும், துணிவாலும் தமிழ்ச் சமுதாயத்தில் மிகப் பெரியமாற்றம் காணக் கால்கோள் நடத்தியவர் பெரியார்.

**"நரித்தனத்தின் வித்தகராய்**
**நம்மினத்தைக்கெடுத்திட்ட**
**சொரி மனத்தோர் சொற்பொழிவை**
**செவிமடுத்து சமுதாய**
**சரித்திரத்தில் சக்கைகளாய்**
**சாக்கடையின் சகோதரராய்**
**தரித்திரத்தில் தவித்தோர்க்கு**
**தன்மானம் உரைத்தவரே!"** எனப் புகழ்ந்துள்ளார் ஆவடியார்.

உலகில் மண்ணாசை, பெண்ணாசை, பொன் னாசை ஆகிய மூன்று ஆசைகளைத் துறந்தவர் களாலும் பதவி ஆசையைத் துறப்பது அரிதாகும். தீண்டாமை, பெண்ணடிமை, சாதி வேற்றுமையாவும் தீமை தரும் மூட நெறிகள், இவை யாவும் கூண்டோடு ஒழியவேண்டும் என்னும் கருத்தைத் தவறாமல் பதிவு செய்துள்ளார்.

**"பொன்னொளியை பொழிவித்து**
**புவனத்தை வாழ்விக்கும்**
**கண்ணனைய கதிர்தலைவன்**
**காய்கின்ற காலமுட்டும்**
**விண்முட்டும் புகழொலியில்**
**வாழ்கின்ற பெரியாரே . . .**



என வாழ்த்துகிறார் சொல்லின் செல்வர் ஆவடியார்.

**சாதி மத ஒழிப்பு :**

"சாதிகள் இல்லையடி பாப்பா "என்றார் பாரதியார். சாதி மத ஒழிப்பு, சாதிப் போராட்டம் இன்றும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது.

**"சாதி இரண்டொழிய வேறில்லை,**
**சாற்றுங்கால் நீதிவழுவா நெறிமுறையில் . . .**
**மேதினியில் . . . இட்டார் பெரியோர் . . .**
**இடாதார் இழிகுலத்தோர் பட்டாங்கில்**
**உள்ளபடி . . .**

என்றார் ஔவையார். சொல்லின் செல்வர் ஆவடியார் மிக அழகாக விளக்கி உள்ளார். நம் நாட்டில் உள்ள சமுதாய ஏற்றத்தாழ்விற்கு பெரிதும் காரணமாய் இருப்பது சாதிமத பேதமாகும். மதங்களைப் போற்றும் பண்பும், சாதிகளை வளர்க்கும் நிலையும் மாற வேண்டுமாயின் எதையும் பகுத்தறிந்து செயல்பட வேண்டும் என்ற திராவிட இயக்கச் சிந்தனையை அழகாகத் தன் நடையில் விளக்கியுள்ளார்.

**"மனித இனத்தை**
**பன்றிக் கூட்டம் போல்**
**பல பிரிவாக்கி**
**சாதி சடங்கெனும்**
**சாணத்தைப் பூசி**
**நீதி நெறி வாழ்ந்தோரை**
**நீசத் தனத்தின்**
**நிலைக் களனாய்**
**நிறுத்தி வைத்த போது**
**இனத்தின் தன்மைகள்**
**இடிந்து விழாது**
**காத்திடக் களம் வந்து**
**கயமை களைந்து**
**தீமைக்குத் தீவைத்த**
**திராவிடத் தந்தையே!**

எனக் கூறியுள்ளார்.

**பெரியார் கொள்கைகள் :**

பெரியாரின் முதன்மையான கொள்கைகள் கடவுள் மறுப்பு வருணாசிரம எதிர்ப்பு, பார்ப்பனிய ஆளுமை எதிர்ப்பு, பெண்கள் விடுதலை, சாதி மறுப்பு முதலியன. இக்கொள்கைகளை கடைசி வரை கொண்டு சென்றார்.

**ஒன்றிக் கிடந்த மனித இனத்தை**
**பன்றிக் கூட்டம் போல்**
**பல பிரிவாக்கியது.**

ஏன் என்று வினா எழுப்பும் சொல்லின் செல்வர் ஆவடிக்குமார். நமக்குள் ஒற்றுமை இல்லாத நிலையை விளக்கியுள்ளார்.

**முடிவுரை :** சமூகநீதிச் சிந்தனைகளைத் தமது தள்ளாத வயதிலும் பட்டிதொட்டி எல்லாம் பரப்புரை செய்த பெரியாரை . . .

**புவி மீது மனிதயினம்**
**பூத்திடும் நாள் வரையில்**
**புகழுருவாய் நீயிருப்பாய்**
**புல்லரை வீழ்த்துதற்கு**

என்று சொல்லின் செல்வர் ஆவடிக்குமார் போற்றுகிறார்.

**மேலும் ,**

**"ஈரோட்டு மண்ணீந்த**
**இங்கர்சால் நீயே!**
**கண்களை இமை காப்பது போல நின்**
**கொள்கை தனைக் காப்போம் உறுதியே!**


எனப் பெரியாரைப் போற்றுகிறார். இந்தித் திணிப்பு, தமிழர்கள் ஆங்கில மோகத்தைத் தாமாகவே திணித்துக் கொள்ளும் போலித்தன மோகம் தமிழ்நாட்டிலும் பரவி வருவதை ஆவடிக் குமார் தன் கவிதைப் பதிவுகள் மூலம் கண்டிக்கிறார்.

"காற்றின் ஈரம் பருகி வாழும் பாலைவனத் தாவரம்போல் முன்னாள் பெருமை என்னும் முதுமக்கள் தாழியில் மூச்சுவிடும் பழம் பெருமையை மீட்டு வரவேண்டும் என்கிறார்.

**பாழ்பட்டு பரிதவித்த**
**பாட்டாளி கூட்டத்தோர்**
**வாழ்வியலின் முறையெல்லாம்**
**வளமடையச் செய்தவரே!**

என்று சொல்லின் செல்வர் பெரியாரின் பெருமை களை மேன்மையுறப் பாடியுள்ளார். ❖

Printed, Published and owned by M.AVADI KUMAR, Published at No.71, Nineth Street, Kamaraj Nagar, Avadi, Chennai - 600 071 and printed at AVADIKUMAR ACHAGAM, No.71, Nineth Street, Kamaraj Nagar, Avadi, Chennai - 600 071. Editor:- M.AVADIKUMAR



# பண்ருட்டி செந்தமிழ்ச் சங்க கவியமுதம் புலனக்குழு கவியரங்கம்

பண்ருட்டி செந்தமிழ்ச் சங்கக் கவியதமும் புலனக்குழுவின் காணொளிக் கவியரங்கம் பண்ருட்டி செந்தமிழ்ச் சங்கத்தின் தலைவர் மற்றும் புலனக்குழு அமைப்பாளர் கவிமாமணி சுந்தர பழனியப்பன் தலைமையில் நடைபெற்றது. பண்ருட்டி செந்தமிழ்ச் சங்கத்தின் செயலாளர் மற்றும் குழுவின் ஒருங்கிணைப்பாளர் சோ. முத்துக் குமார் வரவேற்புரை நிகழ்த்தினார். அனைத்திந்திய தமிழ்ச்சங்கத் தலைவர் மற்றும் அம்மா தமிழ்ப்பீடம் நிறுவனர் "சொல்லின் செல்வர்" ஆவடிக்குமார் கவியரங்கை தொடங்கி வைத்து வாழ்த்தி உரையாற்றினார். உலகத் தமிழாராய்ச்சி நிறுவன மொழி யியல் புலம் மற்றும் தமிழ்ப் புலம் உதவிப் பேராசிரியர், முனைவர் நா. சுலோசனா கவியரங்க நடுவராக இருந்து தலைமையேற்று நடத்தினார். இக் கவியரங்கில் தமிழ்நாடு, புதுவை, கர்நாடகம், கேரளா, ஆகிய இடங்களில் இருந்து நூற்றுக்கும் மேற்பட்ட கவிஞர்கள் கலந்து கொண்டு கவிதை பாடி னார்கள். அனைவருக்கும் மின் சான்றிதழ் வழங்கி சிறப்பிக்கப் பட்டது. இந்நிகழ்வை பண்ருட்டி செந்தமிழ்ச்சங்கச் செய்தித் தொடர்பாளர், மதிப்புறு முனைவர் கவிதை கணேசன், பெங்களூரு ரா. தேன்மொழி ஆகியோர் நெறியாளராக இருந்து வழி நடத்தினர். கோவை விஜி மோகன் என்கின்ற சீ.விஜய லட்சுமி, திருநெல்வேலி கவிஞர் மரு. ஆபிதா பர்வீன், புதுவை பேராசிரியர் புஷ்பவல்லி, சென்னை பேராசிரியர் பு. மகேந் திரன், திருச்செங்கோடு கவிஞர் தீபா மணிசேகரன், ஆகியோர் கருத்தாளர்களாக இருந்து கவியரங்கை சிறப்பாக நடத்தினர். புதுவை கவிதை வானில் கவி மன்றத்தலைவர், கவிஞர் கலா விசு நன்றியுரை நிகழ்த்தினார்.

# நெல்லை பொதிகை தமிழ்ச்சங்க பன்னாட்டு கவியரங்கம்

நெல்லை அரசு அருங்காட்சியகம், சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், நெல்லை பொதிகைத் தமிழ் அறக்கட்டளை இணைந்து இணையவழி பன்னாட்டு கவிய ரங்கத்தினை நடத்தினர். இந்நிகழ்ச்சியில் காப்பாட்சியர் சிவ. சத்திய வள்ளி தலைமை உரையாற்றினார். அவரைத் தொடர்ந்து தமிழக அரசின் சொல்லின் செல்வர் விருதாளர், அனைத்திந்திய தமிழ்சங்கத் தலைவர் ஆவடிக்குமார் தொடக்கவுரை ஆற்றினார். . அவர் தன் உரையில் "எல்லோரும் படிக்கும் வகையில் எளிமையாக கவிதை படைத்தவர் பாரதி. பண்டிதர்களைத் தாண்டி பாமரனும் கவிதை எழுத, படிக்க வைத்தவர் மகாகவி பாரதி. அவரின் புகழுக்காக கொரோனா காலத்திலும் இதுபோன்று இணையவழி பன்னாட்டுக் கவியரங்கம் நடத்துவது மிகச் சிறப்பு" எனக் குறிப்பிட்டு, கவியரங்கினைத் தொடங்கி வைத்தார் . தமிழக அரசின் தமிழ்ச் செம்மல் விருதாளர் கவிஞர். பே. இராஜேந்திரன் அவர்கள் கவியரங்க நெறியாளராக இருந்து கவியரங்கை நடத்தினார். பாளையங்கோட்டை . வழக்கறிஞர் பிரபாகர், கூடலூர் கவிஞர் நிரூபன் குமார், நெல்லை மாவட்டக்கவிஞர் பாப்பாக்குடி முருகன், சிங்கப்பூரை சேர்ந்த கவிஞர் சித்ரா ரமேஷ், இலங்கையைச் சார்ந்த கவிஞர் பரமசிவம் இந்துஜா, கோவை கவிஞர் அன்புத்தோழி ஜெயஸ்ரீ ஆகியோர் 'பாரதியின் உள்ளொளி' என்கிற பொருண்மையில் பல தலைப்புகளில் கவிதைகள் படைத்தனர்.. தமிழக அரசின் முதல் கம்பன் விருதாளர் கலைமாமணி முனைவர் பால இரமணி நிறைவுரை ஆற்றினார். இந்தப் பன்னாட்டுக் கவியரங்கில் உலகெங்கிலுமிருந்து தமிழ் ஆர்வலர்கள் கலந்துகொண்டனர்.







உலகத் தமிழ் மக்களின்
உணர்வுகளும்...
உள்ளக் கிடக்கைகளும்...
உங்களோடு....
எல்லைகளற்ற...
பரந்தப் பெரு வெளியில்....
கழக முரசு
தமிழ்க் காட்சி ஊடகம்
நினைவாய்.... நிழலாய்....
நிஜமாய்....
உங்கள் கைபேசிக்குள்...
தமிழ்ச்சங்கமம்...!
www.kazhagamurasu.in
www.anaithindiatamizhsangam.com
Call: 99411 74777 WhatsApp: 99412 74777
E-mail: kazhakamurasu@gmail.com